பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 25 திங்கட்கிழமை (07.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :73

# விடுதலைப் புலிகளின் விமான அணி: புதிய தகவல்கள் வெளிச்சத்துக்கு!

கொழும்பு,பெப்ரவரி 7

**விடுதலைப் புலிகள் வசம் விமானப்படை ஒன்று இருப்பது பற்றிய செய்திகள் புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகங்களில் பரபரப்பாக வெளியாகியிருக்கின்றன.**

**புலிகளின் விமானங்கள் இரணைமடுப் பகுதியில் உள்ள ஓடுபாதை ஒன்றில் தரையிறங்குவதை ஆளில்லா வேவு விமானங்கள் வீடியோப் படம் பிடித்திருப்பதாகத் தெரிவித்து அப்படங்கள் சிலவும் தென்னிலங்கைப் பத்திரிகை ஒன்றில் பிரசுரமாகியிருக்கின்றன**

'த சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் தமது வாராந்த பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான கட்டுரையில் இந்தப் பரபரப்பு விவரங்களை வெளியிட்டிருக்கிறார்.

வன்னியில் கிளிநொச்சி, இரணைமடு குளத்துக்கு அருகே உள்ள புலிகளின் விமான ஓடுபாதைத் தளத்தையும் -

அந்த ஓடுபாதை அருகே புலிகளின் இரு விமானங்கள் தரித்து இருப்பதையும் -

அரசுப் படைகளின் ஆளில்லா வேவுவிமானம் ஒன்று படம் பிடித்திருப்பதாகத் தெரிவித்து அப்படங்களையும் அவற்றின் விவரங்களையும் தமது வாராந்தக் கட்டுரையில் இக்பால் அத்தாஸ் ஏற்கனவே வெளியிட்டிருக்கின்றார்.

இவ்வாரம் அவர் மேலும் தெரிவித்துள்ள தகவல்கள் வருமாறு:-

கடந்த திங்களன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனா தமது அதி

(14ஆம் பக்கம் பார்க்க)



புலிகள் வசம் உள்ளதாகக் கூறப்படும் 'பிளட்டஸ் பிஸி 7' ரக விமானத்தின் தோற்றம்.

## ஆரியகுளம் சந்தியில் பின்னிரவு வேட்டு!

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ். ஆரியகுளம் சந்திப்பகுதியில் பின்னிரவு 1.15 மணியளவில் கேட்ட வேட்டுச் சத்தங்களால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

வேட்டுச் சத்தங்களையடுத்து அப்பகுதி மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர் என முறைப்பாடு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சேதவிவரம் தெரியவராதபோதிலும் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றமையை யாழ். பொலிஸ் வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. (எ)

## நிவாரண நிதி சமமாகப் பங்கிடப்படுவதை கண்காணிக்கவே இலங்கை வந்துள்ளேன்

### ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் யாழில் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.7

இலங்கையில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய நிவாரண நிதி சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கண்காணிக்கவே இங்கு வந்துள்ளேன்.

- இவ்வாறு தெரிவித்தார் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் ஈவன்ஸ். லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய ஆங்கிலவள நிலையமும் கல்விக் கூடமும் நேற்று யாழ். கஸ்தூரியார் வீதியில் திறந்துவைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ள நிதி சகலருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகின்றதா என்பதை நேரடியாக இங்கு அவதானிக்கவுள்ளேன்.

இலங்கையில் சில தினங்கள் தங்கி நின்று

(14ஆம் பக்கம் பார்க்க)

## உடைகிறது இ.தொ.கா.

கொழும்பு,பெப்.7

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குள் தலைதூக்கியுள்ள உட்பூசல்கள் காரணமாக மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளனர் என ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கும், இவர்களுக்குமிடையில் ஏற்பட்ட பிணக்கை அடுத்தே இவர்கள் கட்சியை விட்டு விலகுவதற்கு முடிவெடுத்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, இம்மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக்கட்சியில் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

இவர்கள் இரண்டு பிரதான கட்சிகளுடன் இதுகுறித்து பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய மாகாண சபையிலும், பிரதேச சபையிலும் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நான்கு பேர் ஏற்கனவே கட்சியிலிருந்து விலகிவிட்டனர்.

கொத்மலை பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேலும் இரு உறுப்பினர்கள் கட்சியை விட்டு மிக விரைவில் விலகத் தீர்மானித்துள்ளனர்.

கடந்த வாரம் நுவரெலியா மாநகர சபை

(14ஆம் பக்கம் பார்க்க)

## சங்கானையில் 'ஹைஏஸ்' மோதி வயோதிபமாது நேற்று உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.7

சந்தையில் மரக்கறி வாங்கிக்கொண்டு வீதிக்கு வந்த வயோதிபமாது 'ஹைஏஸ்' மோதியதில் உயிரிழந்தார்.

சங்கானை பொதுச் சந்தைக்கு முன்பாக நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கே.பராசக்தி (வயது 65 - காரைநகர்) என்பவரே மரணமானார்.

காரைநகரில் மரக்கறி வியாபாரம் செய்து வரும் இவர், வழமைபோல் சங்கானை பொதுச் சந்தையில் மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்துகொண்டு சந்தைக்கு வெளியே பிரதான வீதிப் பக்கமாக வந்துகொண்டிருந்தார் என்றும் -

அப்போது கொழும்புக்குப் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற 'ஹைஏஸ்' இவர் மீது மோதியது என்றும் - கூறப்பட்டது.

படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இவர், சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுப் பிற்பகல் அங்கு உயிரிழந்தார். சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-7)

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## புகுமுக மாணவர்கள் மீது பகிடிவதை துன்புறுத்தல்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ். பல்கலைக்கழகத்தில் புகுமுக மாணவர்கள் பகிடிவதை துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர் என்று பெற்றோர்களிடமும் மாணவர்களிடமும் இருந்து முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

விவசாய பீடத்துக்கும் மருத்துவ பீடத்துக்கும் தெரிவாகிய புகுமுக மாணவர்கள் சிலர் பகிடிவதைத் துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளனர் என்று கூறப்படும் தகவல்கள் தொலைபேசி வாயிலாக உதயனுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

பகிடிவதையை முற்றாகத் தடைசெய்து அத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க மருத்துவபீட நிர்வாகம் உட்பட பல்கலைக்கழக நிர்வாகம் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும் மாணவர்கள் துன்புறுத்தப்படுகின்ற சம்வங்கள் இடம்பெறுகின்றன என்று பெற்றோர்கள் தரப்பில் இருந்து சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

பல்கலைக்கழகச் சுற்று வட்டாரத்தில் ஆள்களற்ற தனி அறைகளில் வைத்து புகுமுக மாணவர்கள் துன்புறுத்தப்படுவதாகத் தொலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் இப்போது நாட்டில் நடைமுறையில் உள்ளதா? இல்லையா?

கொழும்பு, பெப்.7

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளதா? இல்லையா? இது குறித்து அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் படையினர் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இது விடயத்தில் ஒன்றுக்கொன்று முரணான நிலைப்பாட்டிலும், செயற்பாட்டிலும் அரச அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஆழிப் பேரலை அனர்த்தத்தை அடுத்து அவசரகாலச் சட்டம் ஜனவரி 4ஆம் திகதி நடைமுறைக்கு வருவதாக ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டது.

அப்படி அறிவிக்கப்பட்ட பின்னர் அடுத்த 14 நாள்களுக்குள் அதுகுறித்து நாடாளுமன்றத்துக்கு அறிவித்து அதற்கு அடுத்த 14 நாள்களுக்குள் அவசர காலச்சட்டத்தை நீடிப்பதற்கான நாடாளுமன்ற அங்கீகாரத்தைப்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதுதான் அரசமைப்பு விதிமுறை.


ஆழிப்பேரலை அனர்த்தத்தையடுத்து ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் அப்படி நீடிக்கப்படவில்லை. எனவே, அது காலாவதியாகிவிட்டது என முன்னாள் அரசமைப்பு விவகார அமைச்சரும், ஐ.தே.க. பேச்சாளரும், எம்.பியுமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சுட்டிக்காட்டியிருந்தார்.

பொது ஒழுங்கு, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவும் அவசர காலச் சட்டம் காலாவதியானதை நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தினார். நாளை நாடாளு

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




யாழ். கஸ்தூரியார் வீதியில் நேற்று லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய ஆங்கில வள நிலையமும் கல்விக் கூடமும் திறந்துவைக்கப்பட்ட நிகழ்வில் நிலையத்தின் பெயர்ப்பலகையை ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் ஈவன்ஸ் திரைநீக்கம் செய்து வைப்பதையும் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் றொபேர்ட் ஈவன்ஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : பிரபா)



# சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவில் மரக்கன்றுகள் நட்டுப் பராமரிப்பு

## வருட நடுப்பகுதியில் மக்கள் பாவனைக்கு

அரியாலை,பெப்.7

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் சுப்பிரமணியம் பூங்காவில் பூங்கன்றுகளை நட்டுப் பராமரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

நகரின் மத்தியில் அமைந்திருந்த இந்தப் பூங்கா யுத்த அனர்த்தங்களால் அடியோடு அழிந்து போயிருந்தது.

இந்தப் பூங்காவை புதிதாக நிர்மாணிக்கும் வேலகளை யாழ்.மாநகர சபை சில மாதங்களுக்கு முன் ஆரம்பித்தது.

பூங்காவுக்கான அடிக்கட்டுமானங்கள் நிறுவப்பட்டு அங்கு மரக்கன்றுகளையும் பூங்கன்றுகளையும் நட்டுப் பராமரிக்கின்ற வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

கட்டுமானப்பணிகள் முடிவுற்றதும் இந்த ஆண்டின் நடுப் பகுதியில் பூங்கா பொதுமக்களின் பாவனைக்கு திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-17)




வல்வெட்டித்துறை ஆலடி அம்மன் கோயிலடியில் அமைந்துள்ள தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் இல்லம் தற்போது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக மாறி இருப்பது தெரிந்ததே.

தென்னிலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வருகின்றவர்கள் வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்யும்போது தலைவரின் இல்லத்தையும் கண்டுசெல்லத் தவறுவதில்லை.

இங்கே படங்களில் நீங்கள் பார்க்கின்ற காட்சி அபூர்வமானது. தேசியத் தலைவரின் இல்லத்தை நேற்றுப் பகல் படை அதிகாரிகள் குழு ஒன்று பார்வையிட்டது. இல்லத்தின் மூலை முடுக்குகளை அவர்கள் வீடியோவிலும் படமாக்கினர். தலைவரின் இல்லத்தினுள் இராணுவ அதிகாரிகள் காணப்படுகின்றனர் இந்தக் காட்சிகளைத் தனது கமெராவினுள் கைப்பற்றிக்கொண்டார் உதயன் படப்பிடிப்பாளர்.

தீருவிலில் உள்ள பன்னிரு வேங்கைகளின் நினைவுத் தூபியையும் அங்குள்ள கேணல் கிட்டுவின் தூபியையும் நெல்லியடி மகாவித்தியாலய வளவினுள் உள்ள கப்டன் மில்லரின் சிலையையும் இராணுவ அதிகாரிகள் தமது கமெராவினால் வீடியோப்படம் பிடித்துக் கொண்டதாகத் தெரியவருகிறது.
(படம் : சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)

# யாழ். ஆஸ்பத்திரிக்குள் இருந்து கட்டடப் பொருள்கள் கடத்தல்?

## சந்தேகத்தின் பேரில் இருவர் கைது!

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ் போதனா மருத்துவமனைக்குள் இடித்து அகற்றப்படும் கட்டடம் ஒன்றில் இருந்து கட்டடப் பொருள்களை மறைத்து வெளியே கடத்தி வந்த நீண்ட நாள் திருட்டு அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

'தோல் இருக்க சுளை விழுங்குவது' போன்று கட்டடத்தின் இடிபாடுகளோடு சேர்த்து கட்டடப் பொருள்களையும் நைஸாகக் கடத்தி வந்த மோசடியே அம்பலமாகியிருக்கின்றது.

யாழ் மருததுவ மனையில் பணிபுரியும் நிரந்தர சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவரும், ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு வேலைகளை மேற்கொண்டுவரும் தனியார் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவரும் இந்த மோசடி தொடர்பாகப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இடிக்கப்படும் கட்டடத்தின் கூரைக்குப் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கேடரை இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் ஆஸ்பத்திரியின் பின்பக்க நுழைவாயில் ஊடாக வெளியே கொண்டு செல்ல எத்தனித்தபோது பாதுகாப்புக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் சிக்கினர் என்று கூறப்படுகிறது.

இருவரையும் கையும் மெய்யுமாகப் பிடித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்களைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தார்.

இதேவேளை -

யாழ். ஆஸ்பத்திரிக்குள் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடும் - யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான - உழவு இயந்திரம் ஒன்றினுள் கழிவுகளோடு மறைத்து ஏற்றிச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் இரும்புக் கேடரையும் பாதுகாப்பு உத்தியோகத்தர் கண்டு பிடித்தார் என்றும் -

அதுபற்றி உடனடியாகவே அவர் மாநகர சபையின் ஆணையாளருக்கு அறிவித்தார் என்றும் -

ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஆஸ்பத்திரிக்குள் இருந்து கழிவுகளை ஏற்றிச் செல்லும் மாநகர சபை உழவு இயந்திரங்கள் முன்பக்க வாயில் ஊடாகவே சென்றுவரவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரிக்குள் இருந்து கட்டடப் பொருள்கள் மற்றும் வேறும்பல பொருள்கள் நீண்டகாலமாக இவ்வாறு மோசடியான வகையில் கடத்தப்பட்டு வந்திருப்பது தெரியவந்துள்ளது.

தற்போது இடிக்கப்பட்டு வரும் பழைய தாதியர் விடுதிக் கட்டடத்தில் டாக்டர்களால் பயன்படுத்தப்பட்ட அலுமாரிகளுக்குள் இருந்து பெறுமதிமிக்க பொருள்கள் களவாடப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

(ஜ-15)

# மாணவனைக் காணவில்லை

மட்டக்களப்பு,பெப்.7

வேளாண்மை அறுவடைக்குக் கூலித் தொழிலாளர்களை அழைத்துவர வெலிகந்தைக்குச் சென்ற கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவரொருவர் காணாமற்போயுள்ளார்.

ஏறாவூர் 5ஆம் பிரிவைச் சேர்ந்த 26வயதுடைய நல்லதம்பி ஸ்ரீகாந்த் என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.

வெலிகந்தை பிரதேசத்தில் நடமாடும் கருணா குழுவினரால் இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகின்றது.

(க-10)

# எரிவாயு விலை எகிறும் அறிகுறி!

ஷெல்காஸ் லங்கா லிமிடெட் சமையல் எரிவாயுவின் விலையை மீண்டும் உயர்த்தத் திட்டமிட்டுள்ளது. அதற்கான அனுமதியை நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் அது வேண்டியுள்ளது.

ஷெல் காஸ் லங்கா லிமிடெட் முகாமைத்துவப் பணிப்பாளர் ஹஸன் மதனி இதுபற்றிக் கூறியதாவது:-

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது. இருப்பினும் எமது விற்பனை விலையில் மாற்றம் ஏதும் இதுவரை செய்யவில்லை. இதனால் நிறுவனம் மிகவும் நட்டத்தில் இயங்குகின்றது.

ஒரு தொன் சமையல் வாயுவின் சர்வதேச சந்தை விலை 37 ஆயிரம் ரூபாவாகும். ஆனால், நாம் ஒரு தொன் சமையல் வாயுவை 34 ஆயிரம் ரூபாவுக்குத்தான் இங்கு விற்கின்றோம். இதனால் நாம் பாரிய நட்டத்தை எதிர்நோக்குகின்றோம்.

இப்போது சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றை 789 ரூபாவிற்கு விற்கின்றோம். இப்போதைய சர்வதேச சந்தை விலையேற்றத்திற்கு ஏற்ப ஒரு சிலிண்டர் 900 ரூபாவாக விற்க வேண்டும்.

-இந்த விலை ஏற்றத்திற்காக இம்மாத முடிவில் இருந்து நுகர்வோர் விவகார அதிகார சபைக்குத் தீவிர அழுத்தம் கொடுக்கப்படும்.

அரசுடன் நாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி ஒவ்வொரு இரண்டு மாதமும் விலை பரிசீலிக்கப்படுகின்றது.

ஆனால், இப்போதைய நிலைமையைப் பரிசீலித்து மேலும் ஒரு மாதம் தள்ளிப்போடப்பட்டிருக்கின்றது. - என்றார்.

(க-10)

# துர்க்காபுரம் மகளிர் இல்ல ஆண்டு விழா நேற்றுச் சிறப்புற இடம்பெற்றது

வலி.வடக்கு,பெப்.7

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நேற்றுப் பிற்பகல் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், துர்க்காதேவி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், தென்னிந்தியத் திருச்சபை பேராயர் எஸ்.ஜெபநேசன் மற்றும் ஓய்வுபெற்ற அதிபர் செல்வி சி.கெங்காமலர்தேவி ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழக முன்னாள் சமூக மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி சிவராசா, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் மற்றும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர். பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து இல்ல மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறறன.

(10-86)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# புலிகளின் விமான அணி விபரீதம் விளைவிக்குமா?

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி அடுத்த இரண்டு வாரங்களில் மூன்று வருடங்கள் பூர்த்தியாகப் போகின்றன.

கனன்றுகொண்டிருந்த சுடுகுழல்கள் ஓய்ந்ததைத் தவிர யுத்த நிறுத்தத்தினால் வேறு பலன் கிட்டவில்லை. உடல், உயிர், உடைமை இழப்புகள் நிறுத்தப்பட்டன. ஆனால், சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் குறிப்பிடத்தக்க அளவுகூட இல்லை என்பதுதான் நிஜம்.

இந்தப் பின்னணியில்தான் விடுதலைப் புலிகளின் விமானப் படை பற்றிய செய்திகள் தெற்கில் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. இலங்கை அரசின் புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி இச்செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அவை உண்மையாக இருக்கலாம். அல்லது வழமை போல இலங்கை புலனாய்வுத் தரப்பிலிருந்து அவ்வப்போது வெளியாகும்! 'வெடிச்' செய்திகளின் தொடராகவும் இருக்கலாம். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஆழிப்பேரலை காவுகொண்டுவிட்டது, பிரபாகரனுக்கும், கடற்புலித் தளபதி சூசைக்கும் இடையில் 'லடாய்' என்ற சாரப்படவெல்லாம் அவ்வப்போது வெளிவந்த செய்திகளின் வரிசையில் இவையும் சேர்க்கப்படக்கூடியவையோ தெரியாது.

என்றாலும், அச்செய்திகளில் உள்ள ஒரு விடயம் முக்கியமானது. இஸ்ரேல் தயாரிப்பான ஆளில்லாத வேவு விமானங்கள் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களுக்குள் ஊடுருவி புலிகளின் விமான ஓடுபாதை, விமானங்கள், அவை தரையிறங்குவது போன்ற படங்களைப் பிடித்தன என்று கூறப்படுகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் இருக்கையில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இப்படி வேவு விமானங்களை அனுப்பி உளவுபார்ப்பது அரசுத் தரப்பின் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் நடவடிக்கையாகும்.

புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் விமானங்கள் தொடர்பாக ஆளில்லா உளவு வானூர்தி எடுத்த வீடியோப் படங்கள் பிரிண்ட் செய்யப்பட்டு நாட்டின் தேசியப் பாதுகாப்புச் சபைக் கூட்டம் ஒன்றில் வைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குக் காண்பிக்கப்பட்டன என்றும் -

அவற்றைப் பார்த்தபோது, இரண்டாவது சுனாமியால் தாக்கப்பட்டது போன்ற உணர்வு தமக்கு ஏற்பட்டது என ஜனாதிபதி குறிப்பிட்டார் என்றும் -

கொழும்பு ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை- ஆக்கபூர்வமான திசையில் நகர்த்தாமல், தமது தனிப்பட்ட அரசியல், அதிகார சுயலாபங்களுக்காக அதனைக் குழப்பியடித்தால் இதுபோன்ற பல சுனாமித் தாக்கங்களை - ஆழிப்பேரலை அனர்த்தங்களை - தாங்கள் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை ஜனாதிபதி குமாரதுங்கவும் அவரது ஆட்சிப்பீடத்தினரும் உணருவது நல்லது.

இரண்டாவது ஈழப்போரின் தொடக்கத்தில்தான் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவு ஜனனித்தது. அதன் பின்னர் இலங்கைப் போரில் அது ஏற்படுத்திய தாக்கம் இங்கு விவரித்துக் கூறவேண்டிய ஒன்றல்ல. அதன் வளர்ச்சியும், பரிணாமமும், விஸ்வரூப வியாபகமும் கள முனைகளில் நினைத்துப் பார்க்க முடியாத சரித்திரத் திருப்புமுனைகளுக்கு வழிசெய்தன.

இப்போது மூன்றாம் ஈழப்போர் முடிவுற்று சமாதான முயற்சிகளுக்கும், அமைதித் தீர்வுக்கும் சாவகாசமாக வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அரிய வாய்ப்பை- சரித்திர சந்தர்ப்பத்தை- சரிவரப் பயன்படுத்தாமல், குறுகிய அரசியல்லாபங்களுக்காகத் தென்னிலங்கைத் தலைமை கோட்டை விடுமானால் நான்காவது ஈழப்போர் தவிர்க்க முடியாததாகிவிடும்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் புலிகளிடம் விமானப்படை ஒன்று இருப்பது அவ்வாறான யுத்தத்தில் பல மாற்றங்களை - தலைகீழ் நிலைமைகளை - ஏற்படுத்தும் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

ஒருவிமான அணியைத் தனித்து வைத்து முழு அளவில் இயங்குவது என்பது விடுதலைப் புலிகள் போன்ற - தனி நாடு ஒன்றை இன்னும் அமைக்காத - ஒரு விடுதலை இயக்கத்துக்கு இலகுவாக சாத்தியப்படக்கூடிய விடயம் அல்ல என்பது உண்மைதான்.

ஆனால், ஒருசிறிய அளவிலான வான்படை அணியைப் பேணுவதன் மூலம் எதிர்த்தரப்புக்கு அதிக அச்சுறுத்தலையும் நெருக்கடியையும் கொடுக்கமுடியும் என்பதையும் கவனிக்கவேண்டும்.

புலிகளிடம் ஒருசில விமானங்கள் இருந்தாலும், அவை எங்கு, எப்போது, எப்படித் தாக்கும் என்று தெரியாமல் அவற்றை எதிர்கொள்வதற்கு எந்த நேரத்திலும் - எந்த இடத்திலும்- எந்த வகையிலும் - தயாராக இருக்க வேண்டிய நெருக்கடி அரசுதரப்புக்கு ஏற்படும்.

யுத்தம் ஒன்று மீண்டும் மூளும் பட்சத்தில் தமது அரசியல், பொருளாதார, இராணுவ, பாதுகாப்பு மையங்களையும் கேந்திர நிலையங்களையும் மட்டுமல்லாமல், முக்கிய நகரங்கள் அனைத்தையும் முழுப்பாதுகாப்பு 'ராடர்' வலையமைப்புக்குள் கொண்டுவந்து, அவற்றைத் தாக்கவரக்கூடிய அனைத்து வான் கலங்களையும் வானில் வைத்தே அழிக்கக்கூடிய தயார் நிலையில் அரசுத்தரப்பு எந்நேரமும் இருக்கவேண்டும்.

இது நாடு தாங்கமுடியாத செலவின சுமையையும், நெருக்கடிகளையும் தரக்கூடிய விடயமாகும்.

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான நெறியில் - சமரச மார்க்கத்தில் - இணக்கத்தீர்வு ஒன்றைக் காண்பதில் இதயசுத்தியுடன் ஈடுபட்டு, அதை எட்டுவதன் மூலம் இத்தகைய வீண் விபரீதங்கள் ஏற்படாமல் சமாளிக்கலாம். இத்தகைய ஆபத்தான விளைவுகளை அதன் மூலம் புறந்தள்ளலாம் என்பதை ஆட்சியாளர்கள் உணருவது நல்லது.

# இன, மதம் பாராத சுனாமிப் பேரழிவிலும் இனவாதத்தையே வெளிப்படுத்துகின்றனர்

## தெற்கு அரசியல்வாதிகளைச் சாடுகிறார் பத்மினி சிதம்பரநாதன்



யாழ்ப்பாணம்,பெப்.7

தென்னிலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது முதல் அங்கு தோன்றிய அரசியல்வாதிகள் இனவாதத்தை மூலதனமாக வைத்தே அரசியல் நடத்துகிறார்கள். இனமதம் பாராது பேரழிவை ஏற்படுத்திய சுனாமி அனர்த்தத்திலும் கூட அவர்கள் இனவாதத்தையே வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் .

இலங்கையின் சுதந்திர தினமான கடந்த 4 ஆம் திகதி வலி. வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அங்குள்ள பிரதேச செயலகம் முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அந்த மக்கள் போராட்டத்தில் கலந்தகொண்டு உரையாற்றியபோதே பத்மினி சிதம்பரநாதன் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது-

பெப்ரவரி 4, ஸ்ரீலங்கா அரசின் சுதந்திரதினம். ஆனால் தமிழ் மக்கள் கறுப்புக் கொடிகட்டி துக்கத்தை வெளிப்படுத்தும் தினமே இன்றைய தினத்தில் சில விடயங்களை நாம் சிந்திப்போம்.

அவர்களுக்குச் சுதந்திரம் கிடைத்ததில் இருந்து தெற்கு அரசியல்வாதிகள் இனவாதத்தைத் தமது மூலதனமாக வைத்தே அரசியல் நடத்துகின்றனர். குறுகிய பதவி நோக்கத்தோடு இனவாதத்தைக் கிளப்பிவிடுவதே தெற்கில் உள்ள அரசியல் கட்சிகளின் வழமையான உத்தியாக இருந்திருக்கின்றது. இன, மதம் பாராத மிகப்பெரிய சுனாமிப்பேரழிவிலும் கூட இனவாதத்தை அவர்கள் வெளிப்படுத்தினர். தமிழர் தாயகத்திற்குக் கோபி அனானின் வருகையைத் தடுத்ததானது மிகமோசமான இனவாத அரசியல் வெளிப்பாடே.

ஆங்கிலேயர் இலங்கைக்குரிய சுதந்திரத்தை 1948 இல் சிங்கள மேலோங்கிகளிடம் வழங்கினர். அவர்களுடைய இச்செயற்பாடானது இங்குள்ள நிலைமையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் எடுத்த நடவடிக்கை. நீண்டகாலமாகச் சர்வதேச சமூகம் எங்களைப் புரிந்துகொள்ளவில்லை; நாம் ஒரு தேசிய இனம் என்பதைப் புரிந்துகொள்ளவில்லை. எம்முடைய பிரச்சினையை ஒரு சிறுபான்மைப் பிரச்சினை யாகவே சர்வதேசம் புரிந்துகொள்ளப்பார்த்தது. நாம் ஒரு தேசிய இனம்என்பதையோ. ஒரு தேசிய ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை பெறுவதற்காக நாம் போராடுகிறோம் என்பதையோ அதற்காக ஓர் இராணுவத்தைக் கட்டியமைக்க வேண்டிய அவசியம் எமக்கு எழுந்திருக்கின்றது என்பதையோ சர்வதேசம் புரிந்துகொள்ளவில்லை. விடுதலைப் புலிகளின் உறுதியான போராட்டமும் பொங்குதமிழ் போன்ற மக்கள் எழுச்சியும் சர்வதேசத்திற்குத் தமிழர் நிலைமையைப் புரியவைப்பதில் பெரும்பங்கு வகித்திருக்கின்றன. அண்மைக் காலமாகத்தான் சர்வதேசம் எங்களைப் புரிந்துகொள்கின்ற நம்பிக்கைக் கோடுகள் தெரிகின்றன.

நாம் இன்று கறுப்புப்பட்டி அணிவது இந்த நாளை எமது சுதந்திர நாளாக நாம் ஏற்கவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. நாம் ஏற்கவில்லை என்பதில் உள்ள உறுதித்தன்மையை இந்தக் கறுப்பு நிறம் எடுத்துக் காட்டுகின்றது. நாம் எமது இலட்சியத்தில் தெளிவாகவும் உறுதியாகவும் செயற்படுவதே எமக்கு விடுதலை வாழ்வைக் கொண்டு வரும்.

இனவாதத்தை மூலதனமாகக் கொண்ட தெற்கு அரசியல்வாதிகளுடன் நாம் கவனமாக இருப்போம்.

சர்வதேசத்திற்கு மேலும் தமிழர் நிலைப்பாட்டைப் புரிய வைப்பதற்காக எப்போதும் நாம் ஒன்றுதிரண்டு இருப்போம்.

சலுகைகளைக் கண்டு தடுமாறாமல் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்ற இலட்சியத்தில் தெளிவாகவும் உறுதியாகவும் செயற்படுவோம்.

-இவ்வாறு பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார்.

# வழுக்கியாற்றைப் புனரமைப்பதற்கு 200மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## அரச அதிபர் தெரிவிப்பு

வலிகாமம்,பெப்.7

இருநூறு மில்லியன் ரூபா செலவில் இவ்வருடம் 'நியாப்' திட்டம் இரண்டின் கீழ் வழுக்கியாறு புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இதன் முதற்கட்ட வேலைகளுக்காக இவ்வருடம் 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

வழுக்கியாறு புனரமைப்பது தொடர்பாக உடுவில் கமநல சேவை நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்திலேயே அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

'நியாப்' திட்டப் பிரதிப் பணிப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ச.சின்னத்துரை, யாழ்ப்பாண நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஏ.சி.வினோதராசா மற்றும் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, ஆகிய பிரதேச செயலாளர்கள், உதவிப்பிரதேச செயலாளர்கள், விவசாய சம்மேளன உத்தியோகத்தர்கள், விவசாயிகள் என பலர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அங்கு இது தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

வழுக்கியாற்றைப் புனரமைப்பதில் நீண்ட காலம் இருந்துவந்த சில தடைகள் நீங்கியுள்ளதால் இவ்வருடம் தொடக்கம் ஐந்தாண்டுத் திட்டமாக இதனை நடைமுறைப்படுத்த உள்ளோம்.

அபிவிருத்தித் திட்டங்கள் மக்களால் இனம் காணப்படவேண்டும்; முன்னுரிமைப் படுத்தப்பட வேண்டும்; முழுப் பங்களிப்புடன் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அவை அமுலாக்கப்படும்போது முற்று முழுதான பங்களிப்பு வழங்கப்படவேண்டும். அதில் தான் அத்திட்டத்தின் வெற்றி தங்கி உள்ளது.

நீர்ப்பாசனக் குளத்தை மையமாக வைத்து ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்தை ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய திட்டம் என்ற எண்ணத்தோடு அதன் வெற்றிக்காக முழுப்பங்களிப்பையும் வழங்க வேண்டும்.

புனரமைப்புக்கு உதவிவழங்கும் நிறுவனங்களுக்கு எமது பங்களிப்பு நம்பிக்கை ஊட்டுவனவாக இருக்க வேண்டும். இத்திட்டத்தை அமுல்படுத்தும் போது இதனுடன் தொடர்புடைய எந்த ஒரு பிரதேசத்தையும் தவறவிடக்கூடாது.

பொது நோக்கோடு ஆகக்கூடிய பயன்பாட்டைப் பெறக்கூடியதாக இத்திட்டத்தை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று அரச அதிபர் எடுத்துரைத்தார். (கு-152)

# போட்டிகள், விழாக்கள் நடத்துவதை பாடசாலை நேரத்தில் தவிர்க்குக!

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு,பெப்.7

பாடசாலைகளில் நடைபெறுகின்ற விழாக்களையோ, விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளையோ பாடசாலை நடைபெறும் நேரங்களில் நடத்த வேண்டாம் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எஸ்.குணவர்த்தன அறிவித்துள்ளார்.

போட்டிகள் ,விழாக்கள் என்பவற்றால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படையக்கூடாது. எனவே, இவை விடுமுறை நாள்களிலேயே நடைபெற வேண்டும்.

பாடசாலைகளில் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்சிகளை கூட பாடசாலை நேரத்தில் நடத்த வேண்டாம் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பல பாடசாலைகள் அவற்றை உரிய முறையில் கவனத்தில் எடுத்துச் செயற்படவில்லை.

எனவே, இவ்வருடம்நடைபெறும் சகல நிகழ்ச்சிகளையும் உடற்கல்வி பாடக் கற்பித்தலையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்றி ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் நடத்தவேண்டும் - எனவும் அவர் அறிவித்துள்ளார். (கு -152)

## உதயவாக்கு

மனிதன் உழைப்பில் சக்தியை மட்டும் பயன்படுத்தினால் போதாது/- அந்த உழைப்புடன் தன் எண்ணத்தையும் கலக்க வேண்டும்.

இங்கர்சால்.

## நாளை

தை 26
செவ்வாய்க்கிழமை
(08.02.2005)
திதி : சதுர்த்தசி
காலை 7.26 வரை
அமாவாசை
பின்னிரவு 5.12 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம் :11.05 - 12.35
ராகுகாலம்: 3.35-5.05
(யாவும் பழைய நேரப்படி)

# நவீன முறையில் கள்ளு அடைக்கும் தொழிற்சாலையை நிறுவ முடிவு

வலிகாமம் தெற்கு,பெப்.7

நவீன முறையில் கள்ளைப் போத்தல்களில் அடைக்கும் தொழிற்சாலை, எரிபொருள் நிலையம், நவீன வடிசாலை போன்றவற்றை இவ்வருடம் நிறுவுவதற்கு வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி தீர்மானித் துள்ளது.

மானிப்பாயில் உள்ள கொத்தணிச் செயலகத்தில் இடம்பெற்ற அங்கத்துவ சங்கங்களின் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

கொத்தணியின் புதிய தலைவர் இ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றும் சில முடிவுகள் பின்வருமாறு-

★கடந்த காலங்களைப் போன்று இவ்வருடம் கொத்தணி அங்கத்துவ நிறுவனங்களால் நடத்தப்பட்டுவரும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இலவச சீருடைகள் வழங்குதல்.

★நவீன வசதிகளுடன் கூடிய கொத்தணிக்கான காரியாலயம் ஒன்றை அமைத்தல்.

★துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இவ்வருடம் உற்பத்தியாகும் கள், சாராயம் போன்றவற்றை வெளிமாவட்டங்களுக்குக் கொண்டுசென்று விற்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். (கு-152)




சுன்னாகம் தனியார் பஸ் தரிப்பு நிலையக் கட்டடத் திறப்புவிழாவின்போது, புதிதாக அமைக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையக் கட்டடத்தின் முகப்புத் தோற்றத்தை முதலாவது படத்திலும் பெயர்ப்பலகையினை யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் திரைநீக்கம் செய்துவைப்பதனை இரண்டாவது படத்திலும் யாழ்.மாவட்ட அரச அதிபர் பெயர்க் கல்வெட்டைத் திரைநீக்கம் செய்து வைப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.
இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்தினா உரையாற்றுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: கவிதரன்)

# சிறுவர்களின் மறுவாழ்வு பற்றி எதுவுமே பேசாமல் படைகளில் சேர்ப்பதாகக் கூக்குரலிடுவது தவறு!

## ஊடகவியலாளர்களுக்குத் தமிழ்ச்செல்வன் விளக்கம்

கிளிநொச்சி,பெப்.7

போரினாலும் இயற்கைப் பேரழிவினாலும் அநாதைகளாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான சிறுவர்களைப் பராமரிப்பதற்காகச் சர்வதேச சமூகம் வழங்கும் உதவிகளைத் தடுக்கும் நோக்குடனேயே சிறுவர்களைப் புலிகள் இயக்கம் படைகளில் சேர்ப்பதாகத் திட்டமிட்டு குற்றச்சாட்டுகள் கிளப்பப்படுகின்றன.

இந்தச் சிறுவர்களின் மறுவாழ்வு பற்றி - சிந்திப்பதைத் தவிர்த்துவிட்டுப் போரில் சிறுவர்களைச் சேர்க்கும் விடயத்தை மட்டும் தூக்கிப்பிடித்துக் குரல் எழுப்புவது அபத்தமானது.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருடன் பேச்சு நடத்திய பிறகு ஊடகவியலாளர்களுக்குப் பேட்டி அளித்த தமிழ்ச்செல்வன், அங்கு இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தினார்.

சுனாமி அனர்த்தத்துக்குப் பின்னர் புலிகள் இயக்கம் சிறுவர்களைப் படைகளில் சேர்ப்பது பற்றிய குற்றச்சாட்டு தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:-

சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதாக மட்டும் கூறிக்கொண்டிருக்கின்றார்களே தவிர, போரால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு விடுதலைப் புலிகள் எப்படியான புனர்வாழ்வுப் பணிகளை, வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றார்கள் என்பது பற்றி தெரிந்தும்கூடப் பேச மறுக்கிறார்கள்.

தற்பொழுது சுனாமி அனர்த்தத்தினால் நூற்றுக்கணக்கான சிறுவர்கள், பெற்றோர், உறவினர்களை இழந்து அநாதரவாக உள்ளனர். எவ்வளவோ நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அந்தப் பிள்ளைகளின் மறுவாழ்வுப்பணிகள், புனர்வாழ்வுப் பணிகள், எதிர்காலம் சம்பந்தமாக எந்தவிதமான ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்காமல் விட்டுவிட்டு, விடுதலைப் புலிகள் மீது கறை பூசுகின்ற - சேறு பூசுகின்ற - பிரசாரங்களை மட்டும் மேற்கொண்டு வருகின்றார்கள். உண்மையிலே விடுதலைப் புலிகள் அமைப்பும் தொண்டர் நிறுவனங்களும் இணைந்து ஏனைய பகுதிகளைவிடத் தமிழர் தாயகப் பிரதேசத்தில்தான் மிகவும் காத்திரமாகவும் ஒழுங்கான முறையிலும் சீரான முறையிலும் நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதைச் சர்வதேச ஊடகவியலாளர்களும் சர்வதேச அதிகாரிகளும் பாராட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்குமிடையே ஏற்பட்டுவருகின்ற நல்லெண்ணத்தைச் சீர்குலைக்கும் நோக்கோடுதான் இப்படியான திட்டமிட்ட பிரசாரங்களை அரசு மேற்கொண்டு வருகின்றனது.

சிறுவர்களைப் படைக்குத் திரட்டுகின்றார்கள், சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துகின்றார்கள் என்று குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆனால், இங்கு போர் நடக்கவில்லை. ஒரு யுத்த நிறுத்தம பேணப்பட்டு வருகின்றது. இந்த யுத்தநிறுத்த சூழலில் பல எண்ணிக்கையான சிறுவர்கள் எங்களிடம் வந்து தஞ்சமடைகின்றனர். அவர்கள் எங்களுடைய சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர்களுக்கான இல்லங்களுக்கு அழைத்துச செல்லப்பட்டு அங்கு மறுவாழ்வு அளிக்கப்படுகின்றது. அத்துடன், அவர்களுக்கான புனர்வாழ்வு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை எல்லாவற்றையும் மூடிமறைத்துவிட்டுச் சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கின்றனர் என்றவாறான பிரசாரத்தை இலங்கை அரசும் ஏனைய அமைப்புகளும் கட்டவிழ்த்துவிட்டுள்ளன. இதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

### உண்மை நிலை அறிய நேரில் வாருங்கள்

இங்குவந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் முகாம்கள், கிராமங்கள் தோறும் நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்து உண்மை நிலைகளை அனைத்து அமைப்புகளும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதுதான் எங்களுடைய பகிரங்க வேண்டுகோளாக உள்ளது.

அண்மையில் நாங்கள் குறிப்பிட்டளவான சிறுவர்களை அவர்களது பெற்றோர்களிடம் சேர்ப்பித்துள்ளோம்.

வீடு செல்ல மறுத்த சிறுவர்களை, சிறுவர் இல்லங்களுக்குக் கொண்டுசென்று அவர்களின் கல்வி, எதிர்காலம் சம்பந்தமான வேலைத் திட்டங்களைச் செய்துள்ளோம்.

இப்படியான பல நல்ல பணிகளை நாங்கள் செய்து கொண்டிருக்கின்ற சூழலில் தேவையற்ற பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

சுனாமி பேரழிவின் பின்னர் எத்தனையோ சிறுவர்கள் எந்த வழியும் தெரியாது மிகவும் மோசமான நிலையில் சமூகத்திலே தனித்து விடப்பட்டுள்ளனர். அவர்களை நாங்கள் எங்கள் தேசியத்தலைவரின் பணிப்புக்கிணங்க அவர்களுக்கான மறுவாழ்வுத்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்திக் கொண்டிருககின்றோம்.

சிறுவர்களைக் கொண்டுவந்து, அவர்களைப் பராமரிப்பது மட்டுமல்ல, அந்தந்தக் கிராமங்கள், நலன்புரி நிலையங்களுக்குச் சென்று நூற்றுக்கணக்கான தொண்டர்களை அங்கு அனுப்பி, அங்குள்ளவர்களுக்கு தொணடர்கள் மூலம் உளவியல் மேம்பாட்டுக்கான பணிகள்கூட மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, இவற்றை வந்து நேரடியாகப் பார்த்து செய்திகளை வெளியிடுவதுதான் பொருத்தமானதென நம்புகின்றேன்.

★ *கேள்வி:* சுனாமி அனர்த்தத்தால் எத்தனை சிறுவர்கள் உங்களது கணிப்பின்படி அநாதரவாக்கப்பட்டுள்ளனர்?

☆ *பதில்:* நான் நினைக்கின்றேன் இதுவரை எங்களால் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி 500 சிறுவர்கள் என்ற எண்ணிக்கையைத் தாண்டி விட்டது. இது இன்னும் அதிகரிக்கலாம். பல சிறுவர்கள் பெற்றோரை இழந்து தமது உறவினர்களின் பராமரிப்பில் உள்ளனர். அவர்களின் விவரங்கள் எங்களிடம் சரியாக இல்லை.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் பலநூற்றுக்கணக்கான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் இனங்காணப்பட்டுள்ள சிறுவர்களை அந்தந்தப் பகுதிகளில் உள்ள பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி அவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளைத் தொடங்கியுள்ளோம்.

அத்துடன், அவர்களுடைய நெருங்கிய உறவினர்களினால் பராமரிக்கப்பட்டுவருகின்ற சிறுவர்களுக்குத் தேவையான உதவித்தொகையை வழங்கி, அவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டத்திற்கான ஒழுங்குகளைச் செய்துவருகின்றோம். முழு அளவில் சிறுவர்களுக்கான நலன் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றை மூடிமறைத்துவிட்டு, இப்படியான பிரசாரங்களைச் செய்வதுதான் அரசினதும் சில நிறுவனங்களினதும் செயற்பாடாக உள்ளது. இது எங்களுக்குக் கவலையளிப்பதாக உள்ளது. எங்களுடைய மனிதாபிமான வேலைத் திட்டங்களைக்கூட கொச்சைப்படுத்திச் சீர்குலைக்கும் நோக்குடன்தான் இந்தப் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாக எண்ணுகின்றேன்.

★ *கேள்வி:* சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன் புரிநிலையங்களில் வாழும் மக்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

☆ *பதில்:* அந்த மக்கள் இந்த அழிவுகள், அவலங்களால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதிலிருந்து மீண்டெழுந்து நம்பிக்கையோடு இந்தத் தேசத்திலே தமது வாழ்வு நிலைகளை அமைத்து, அவர்களது பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக எங்களுடைய தேசியத் தலைவரின் பணிப்புக்கிணங்க, அனைத்துக் கட்டமைப்புக்களையும் நாங்கள் முடுக்கிவிட்டுள்ளோம். பல நிவாரணப்பணிகள், புனர்வாழ்வுப் பணிகள் என எங்களால் முடிந்த எங்களிடம் இருக்கின்ற முழு வளங்களையும் பயன்படுத்தி இங்குள்ள தொண்டர் ஸ்தாபனங்களையும் இணைத்து, புலம்பெயர்ந்த மக்களின் உதவிகளையும் பெற்றுப் பல பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். அந்தந்தப் பகுதிகளில் பெருமளவான போராளிகள் நின்று செயற்படுகின்றார்கள்.

நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்குத் தேவையான உணவு வசதிகள், மருந்து வசதிகள், அடிப்படை வசதிகள், சுகாதார வசதிகள், தற்காலிக இருப்பிடங்களை அமைப்பதற்குத் தேவையான உதவிகள் போன்ற பல்வேறுபட்ட பணிகளை மேற்கொள்ளுவதில் எமது போராளிகள் நேரடியாகக் களத்தில் நின்று செயற்பட்டு வருகின்றனர்.

(ஐ-3-203)

# யாழ்.செயலக பதிவாளர் பிரிவில் தினமும் மக்கள் முண்டியடிப்பு

## சான்றிதழ் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்.செயலகத்தில் இயங்கும் பதிவாளர் பிரிவில் சான்றிதழ்கள் பெறுவோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

'சுனாமி' அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது தேவைக்கு பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக பதிவாளர் பிரிவுக்கு பெரும் எண்ணிக்கையில் தினமும் வந்து விண்ணப்பிக்கின்றனர்.

அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், பதிவாளர் பிரிவு அதிகாரிகளும் ஊழியர்களும் சளைக்காது பணிபுரிவதை அவதானிக்க முடிகிறது. ஆயினும், சான்றிதழ்களைப் பிரதி செய்யும் போட்டோ பிரதி இயந்திரத்துக்குத் தேவையான மை (ரோணர்) மற்றும் தாள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று பதிவாளர் பிரிவு வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது. தற்சமயம் அந்தப் பிரிவின் அதிகாரிகள் தமது சொந்தப் பணத்தில் இந்தப் பொருள்களைக் கொள்வனவு செய்தே தேவைகளைப் பூர்த்திசெய்து வருகின்றனர். (ஐ-3)


## மரண அறிவித்தல்

### செல்வி கனகரத்தினம் புவனேஸ்வரி



நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கனகரத்தினம் புவனேஸ்வரி நேற்று (06-02-2005) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் தம்பதிகளின் மகளும் பரராசசேகரம், செல்வநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஜயலட்சுமி, கமலாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும நந்தீஸ் (T.O.பிரதேச சபை - வேலணை), அனுசாந்தி, அமுதா, சதீஷ் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-02-2005) திங்கட் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கரையான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.பரராசசேகரம்,
க.செல்வநாயகம்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய். (41824)(26-14-45)


# மணவாளக் கோலப் பெருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.7

கோண்டாவில் மிஷன் பாடசாலை வீதி ஸ்ரீசாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் தேவஸ்தானத் தின் வருடாந்த மணவாளக் கோலப் பெருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு அஷ்டோத்ர சங்காபிஷேகம் நடைபெறும். மாலை 4.30 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று, வைரவப் பெருமான் திருவீதியுலாவரும் நிகழ்வு இடம்பெறும். (த-204)

# தபாலகத்துக்குக் காணி கொள்வனவு

யாழ்ப்பாணம்,பெப்.7

அச்சுவேலி தபால் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு அச்சுவேலி - சங்கானை வீதியில் பழைய தபால் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் காணி ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

தற்போது வசதிகள் குறைந்த கட்டடத்தில் இயங்கிவரும் அச்சுவேலி தபால் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவென அச்சுவேலி தபாலக அபிவிருத்திச் சபை என ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

இந்த அபிவிருத்திச் சபை கிராம மட்டத்தில் நிதி சேகரித்துள்ளது. இந்த நிதி மூலம் சங்கானை வீதியில் தனியாருக்குச் சொந்தமான 8 பரப்புக் காணி ஒன்று வாங்கப்படவுள்ளது.

இக்காணியைத் தபால் திணைக்களத்துக்கு வழங்கி, தபால் திணைக்களத்தின் நிதி மூலம் புதிய நிரந்தர தபால் நிலையக் கட்டடம் ஒன்றை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சபையின் தலைவர் தெரிவித்தார். (த-173)

# தேசப்பற்று இல்லாதவர்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது

நல்லூர்,பெப்.07

தேசப்பற்று அற்றவர்களால் ஒருநாட்டை கட்டியெழுப்ப முடியாது. முதலில் எமக்குத் தேசப்பற்று அவசியம் என்பதை உணரவேண்டும்.

- இவ்வாறு அகில இலங்கை காந்தய சேவா சங்கத்தின் தலைவர் கே.க.தம்பிப்பிள்ளை கூறினார். மகாத்மா காந்தியடிகளின் 56ஆவது நினைவுதினம் திருநெல்வேலி வேதாந்த மடத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் தம்பிப்பிள்ளை தொடர்ந்து பேசும்போது கூறியதாவது-

நாங்கள் படிக்கும் காலத்தில் எமது ஆசிரியர்கள் தேசப்பற்றையும் ஊட்டினார்கள். இன்று அந்தநிலை இல்லை உணவு, உடை, சிந்தனைகளில்கூட மாற்றம் ஏற்பட்டுவருகின்றது. இதனால், நாளுக்குநாள் எமது கலாசாரத்தை இழந்து வருகின்றோம். எமது விழுமியங்கள் பேணப்படவேண்டும் என்பதனாலேயே இந்த விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகியது. இவற்றை உணராமல், விதேசிய கலாசாரங்களில் சிக்கி அதனையே பின்பற்றுவோம் என்று நிலை தொடர்ந்தால் விடுதலைப் போராட்டம் அர்த்தமற்றதாகி விடும்.

1977 இல் திறந்த பொருளாதாரக் கொள்ளை எமது மாணவர்களுக்குப் பாதிப்பை உண்டு




பண்ணிவிட்டது. அவர்கள் இன்று தொலைக்காட்சிப்பெட்டிக்கு முன்னாலேயே தமது நேரத்தை அதிகமாக செலவிடுகிறார்கள். நன்மையான நிகழ்வுகளைப் பார்க்கலாம். ஆனால், தொலைக்கட்சிப்பெட்டியில் கூடுதலாக மிகமோசமான நிகழ்வுகளையே பார்க்க முடிகின்றது. அது ஒரு சாத்தான்.

சர்வோதயம் என்பது எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கச்செய்யும் கருத்தைக்கொண்டது. காந்தியடிகள் அளப்பரிய தொண்டுகளைச் செய்திருந்தாலும் கல்வி குறித்த சிந்தனை செயற்பாடுகள் முதன்மையானவை. எமது நாட்டிற்கு உகந்த கல்விமுறை தேவை. காந்தியடிகளின் கல்வித் தத்துவர்த்தங்கள் உன்னதமானது. தேசப்பற்றுடன் கூடிய அந்தக் கல்விமுறை இங்கு அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். ரியூட்டரிகள் எமது கல்வியை அழிக்கும் பயங்கரமான ஒன்று. அவைகள் மூடப்படவேண்டும். எமது தேசிய கல்விக்கூடங்கள் ஊடாக ஆங்கிலக்கல்வியை நாம் கற்கவேண்டும்.

அந்நியரின் வருகை எமது மக்களைப் பிளவுபடுத்திவிட்டது அவர்களது நாகரிகத்தை மதங்களைக் கொண்ட எமது மக்கள் தம்மை ஒருவேறுபட்ட மனிதர்களாகவே காட்டிக்கொள்கிறார்கள். எமது சூழ்நிலை பொருளாதார நிலைக்கு இசைவான கல்வியே தேவை. எமது அடிப்படைக் கல்வி பற்றி நாம் சிந்திக்கவேண்டும். காந்தியடிகளின் கல்வித் தத்துவங்கள் ஊடாக எமது சமூகம் உயர்ந்த கல்வி ஸ்தானத்தைப் பெறவேண்டும் - என்றார்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் வடபீடாதிபதி சங்கத்தின் பொருளாளர் மா.சபாரத்தினம் ஆகியோரும் பேசினார்கள். காந்தியத்தின் 19 ஆவது மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. காந்தியடிகள் குறித்த பஜனையும் இடம் பெற்றது.

(ப-111)

# தென்னிந்தியத் திருச்சபை நெடுந்தீவுக்கு பெரும்பணி ஆற்றிவருகிறது

## 150 ஆவது ஆண்டுவிழாவில் ஆயர் ஜெபநேசன்

யாழ்ப்பாணம் தென்னிந்தியத் திருச்சபை தனது வளங்களை நெடுந்தீவுக்கு உரியமுறையில் வழங்கிவருகின்றது என்று தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.பேராயர் அருட்திரு. எஸ்.ஜெபநேசன் அடிகளார் கூறினார்.



நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபையின் 150 ஆவது ஆண்டு நிறைவுவிழா மேற்படி திருச்சபையின் முன்றிலில் போதகர் அருட்திரு. யோண் செல்வம் தலைமையில் நடைபெற்றது.

அருட்திரு. ஜெபநேசன் அடிகளார் அங்கு மேலும் பேசும்போது கூறியதாவது:-

நெடுந்தீவு, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசியத் தேவைகளில் பின்னடைந்து காணப்படுகின்றது. வளர்ந்துவரும் நவீன உலகில் ஆங்கில, விஞ்ஞான அறிவு மாணவர்களுக்கு இன்றியமையாத நிலையில் அவற்றிற்கான ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் கஷ்ரமுறுகின்றனர்.

நெடுந்தீவில் இருந்து கல்விக்காக வட்டுக்கோட்டையில் உள்ள எமது கல்லூரியில் சேர விரும்பும் மாணவர்களை நாங்கள் அவர்களுக்குக் கஷ்ரங்களற்ற வகையில் இடம் கொடுத்து வருகின்றோம். சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கான செயற்பாடுகளையும் நாம் இங்கு மேற்கொண்டுள்ளோம்.

இந்தக் கிராமத்தின் மீது எனக்கு ஒருமதிப்பு இருக்கிறது. இது தவத்திரு. தனிநாயகம் அடிகளாரின் இடம் அவரது உருவச்சிலையை இங்கு நான் திறந்துவைப்பதில் பெருமையடைகின்றேன். கஷ்டம் நிறைந்த இடத்தில் மகிழ்ச்சியாகப் பணியாற்றவேண்டும். கணனி அறிவு வளர்ச்சியடைந்து வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். மிகவும் அக்கறையுள்ள ஒருகிராமமாக இதனை நாம் வைத்துள்ளோம். நீங்கள் தரும் உயரிய திட்டங்களைச் செயற்படுத்த நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம்.

150 வருடங்கள் இந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்காகத் தென்னிந்தியத் திருச்சபை புரிந்து வந்த செயற்பாடுகளை இங்கு பலரும் கூறினார்கள். இந்த இடத்தில் விளைச்சலைத் தந்தவர் தேவன். அவரை நாங்கள் நன்றியோடு நினைக்கின்றோம். இப்பகுதிகளில் பல இடங்களில் எமது சபை இல்லாதபோதும் கிறிஸ்துவின் நற்செய்திகள் சொல்லப்பட்டது. இங்குள்ள தேவாலயம் வில்லியம் மேதரால் கட்டப்பட்டது.

வசதிகள் குறைந்தபோதும் மகிழ்ச்சியோடு திருப்பணியாற்ற வந்தவர் யோண் செல்வம். எமக்கு விசுவாசமாக இருந்துவரும் இந்தச் சபைக்கு எனது உளமார்ந்த நன்றிகள் உரியது - என்றார்.

அருட்திரு. யோண் செல்வம் தனது தலைமையுரையில் கூறியதாவது:

அளப்பரிய பணிகளைச் செய்து 150 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இந்தக் கிராமத்தின் வளர்ச்சியிலும் இறைபணியிலும் மேலும் புதிய வரலாறுகளைப் படைப்போம் என்ற எமது நம்பிக்கைக்கு இறையாசிகள் நிச்சயம் - என்றார்.

நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு எஸ்.ஜெபநேசரட்ணம் அடிகளார் விழாவையொட்டி வெளியிடப்பட்ட விசேட மலரின் ஆய்வுரையை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பப் பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.மகேஸ் வழங்கினார்.

பேராயர் அருட்திரு. ஜெபநேசன் அடிகளாரிடம் இருந்து 150 ஆவது ஆண்டு மலரில் முதல் பிரதியை மகேஸ் பெற்றுக்கொண்டார்.

முன்னதாக பொதுவான பிரார்த்தனைகளும் சிறப்பாக விடுதலைப் போராட்டம், சுனாமி அனர்த்தங்கள் காரணமாக உயிரிழந்த மக்களின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

நெடுந்தீவு முன்னாள் கல்விப் பணிப்பாளர் இரா.சின்னத்தம்பி, நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு. எஸ்.ஜெபநேசரட்ணம், நெடுந்தீவு றோ.க.பெண்கள் வித்தியாலய அதிபர் அருட்செல்வி இக்னேசியாபிள்ளை, சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன், உடுவில் சபைக்குரு அருட்திரு. எஸ்.சி.ஆனல்ட், திருச்சபை உறுப்பினர் எ.அருந்தவசீலன், சந்திரமோகன் ஆகியோரும் உரையாற்றினர். (ப-111)

# தொழில்சார் கற்கைநெறிகளின் முக்கியத்துவம் உணரப்படவேண்டும்

தொழில்சார் கற்கைநெறிகளின் முக்கியத்துவம் உணரப்பட்டு நிதானமாகப் பாடசாலைகளிலேயே ஊக்குவிக்கப்படுமானால் எதிர்காலத்தில் சுயதொழில் விருத்தியாகும். வேலையில்லாதத் திண்டாட்டத்தையும் தணிக்கும் என உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் முறைசாரக் கல்விப்பிரிவை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய சமூகஜோதி கா.கணேசதாசன் கூறினார்.

வித்தியாலய அதிபர் என்.சிவகடாட்சம் தலைமையில் வலிகாமம் வலய முறைசாராக் கல்விப் பிரிவின்கீழ் தையல்பயிற்சி வகுப்புகளை அவர் ஆரம்பித்துவைத்தார்.

24 யுவதிகள் தையல் பயிற்சிக்கென இணைந்துகொண்டனர். சமூகஜோதி கா.கணேசதாசன் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

அறிவையும் ஆற்றலையும் உறுதிப்படுத்தக்கூடியவகையில் பாடசாலைகளில் கல்வித் திட்டங்கள் அமைக்கப்படவேண்டும். அதுவே வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக அமையும்.

சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் பொருளாதாரத்துறையில் தன்னிறைவைத் துரிதப்படுத்தவும் தொழில்நுட்பக் கல்வி மாணவர்களுக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். வெறும் ஏட்டுக் கல்வியைக் கொண்டு மாணவர்கள் தம்வாழ்வைப் புத்தகப் பூச்சிகளாக்கிக் கொள்ளக்கூடாது. பாடசாலையை விட்டு வெளியேறும் பலர் உரிய வேலை வாய்ப்புகள் கிடைக்காமையால் வன்முறைகளில் ஈடுபடமுனைகின்றனர். எனவே, பாடசாலைக் கல்வி அவர்களுக்குத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியக் கல்வியாக அமையவேண்டும். (ப-152)

# அதிபர்கள் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த பெருமை உடுவில் மகளிர் கல்லூரிக்கு உண்டு

வலி.தெற்கு,பெப்.7

தென்கிழக்கு ஆசியாவின் முதலாவது விடுதியுடன் கூடிய பெண்கள் பாடசாலையாகிய உடுவில் மகளிர் கல்லூரியில் அதிபர்களாகச் சேவையாற்றிய அத்தனை அதிபர்களும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்குத் தம்மாலான சேவைகளை அர்ப்பணிப்புடன் ஆற்றியுள்ளனர். அத்தகைய பெருமை இக்கல்லூரிக்கு நீண்டகாலமாகவே உண்டு. இக்கல்லூரியின் எட்டாவது அதிபராகக் கடமை ஏற்கும் திருமதி செறாணி மில்ஸ்"ம் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையை ஆற்றுவார் என்பது எமது நம்பிக்கை.

உடுவில் மகளிர் கல்லூரியின் எட்டாவது அதிபரான திருமதி செறாணி மில்ஸ" பதவியை வழங்கி ஆசீர்வாதம் செய்த தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சகர் அருட்திரு. கலாநிதி எஸ்.ஜெபநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

தென்னிந்தியத் திருச்சபை உடுவில் பேராலயத்தில் அதிபர் பதவியேற்பு வைபவம் வெகு சிறப்பாக இடம்பெற்றது. தென்னிந்தியத் திருச்சபை செயலாளர் வண.எஸ்.சி. ஆர்னல்ட்னால் இவ்வைபவம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

சமய ஆராதனை ஆசீர்வாத வைபவங்களுக்குப் பின்னர் ஆலயத்தில் இருந்து புதிய அதிபர் கல்லூரிக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

அங்கு இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலாநிதி எஸ்.ஜெபநேசன் மேலும் கூறியதாவது-

தென்னிந்தியத் திருச்சபையின் ஆதரவில் நடைபெற்றுவரும் கல்லூரிகளான யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களாகப் பதவியேற்பவர்களுக்கு அதிவிசேட தகைமை இருக்கவேண்டும் என்பது திருச்சபையின் விருப்பமாகும்,திருமதி சிராணி மில்ஸிடம் நாம் எதிர்பார்க்கும் சகல தராதரங்களும் தகைமைகளும் உண்டு.

மிகுந்த வல்லமையுடனும் முற்போக்கு சிந்தனைகளுடனும் அதிபர் பதவி ஏற்கும் இவர் கல்லூரிக்கான வேலைத்திட்டங்களை முன்கூட்டியே வகுத்துச் செயற்படவேண்டும். அத்துடன் வகுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை உரியகாலத்தில் பரிபூரணமாகச் செய்து முடிக்கவேண்டும். இந்தியாவில் இயங்கும் பெண்கள் கல்லூரிகளுக்குப் பெண்களே அதிபர்களாக இருந்து தமது முழுநேரத்தையும் கல்லூரி வளர்ச்சிக்குச் செலவிடுகிறார்கள். இக்கல்லூரியின் புதிய அதிபரும் அதேவகையில் செயற்படவேண்டும் - என்று கூறினார்.

இலங்கை பைபிள் சங்கச் செயலாளர் திருமதி லக்ஷாணி பெர்ணாண்டோ, வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், யாழ்ப்பாண கல்லூரி அதிபர் என்.விமலேந்திரன், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சபா.ஜெயராசா, முன்னாள் அதிபர் கலாநிதி செல்வி சி.வி.செல்லையா உட்படப் பலர் புதிய அதிபரை வரவேற்று உரையாற்றினர்.

திருமதி செறாணி மில்ஸ் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலுரையாற்றுகையில்,

தேவனுக்காக நான் மேற்கொள்ள இருக்கும் இச்சேவை வேறு எதற்கும் ஈடாகாது. தேவனுக்காக ஆற்றும் சேவையினால் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அவரின் பிள்ளைகளை ஆண்டவரின் அடியார்களாக வளர்த்தெடுப்பது எமது கடமை. அதில் இருந்து நான் விலகிப் போகமாட்டேன் எனக் கூறினார்.

ஆசிரியை திருமதி கலாமகேந்திரகுமார் நன்றி கூறினார். (ப-152)



உடுவில் மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக திருமதி செரானி மில்ஸ் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீன அத்தியட்சகர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தவேளை எடுக்கப்பட்ட படம். *(வலி.தெற்குச் செய்தியாளர்)*

# மாணவருக்கான கல்வி வசதிகளை சிறப்புறச் செய்து கொடுப்பது அவசியம்

தமிழ் மாணவர்களின் கல்வி வாய்ப்புக்களையும் அதற்கான வசதிகளையும் சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது



அவசியமாகும். தமிழ் மாணவர்களின் கல்வி யாழ்.மாவட்டத்தில் பின்னோக்கிச் செல்வதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இன்று மாணவ சமுதாயமாக இருப்பவர்களே நாளை இத்தேசத்தைக்கட்டி ஆளும் வல்லமை பொருந்திய தேச நிர்மாணிகளாக வரவேண்டியவர்கள். இதனை இன்றைய மாணவர்கள் உணரத் தவறிவிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மூளாய் ரெமிங்ரன் கல்வி வளர்சோலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்:-

எமது கல்விச் செயற்பாடுகள் யாவும் எமது தேசத்தைக் கட்டியெழுப்புபவையாக இருக்கவேண்டும். இந்தத் தேசத்தின் வளர்ச்சி, அபிவிருத்தி போன்றவற்றை மாணவ சமுதாயமே முன்னின்று செயற்படுத்தத்தக்க வல்லமையைப் பெறவேண்டும். கற்கின்றது கல்வி அறிவுக்கு மட்டுமல்ல ஆக்கத்திற்கும் பயன்படவேண்டும்.

இன்று சுனாமிப் பேரழிவு காரணமாக எமது கரையோரப் பிரதேச மக்கள் பல உயிர்களையும் பல கோடிக்கணக்கான சொத்துக்களையும் இழந்து நிர்க்கதியான நிலையில் எம் தேசம் உள்ளது. இப்பிரச்சினையால் நாட்டின் தேசிய பிரச்சினை பின்தள்ளப்பட்டுவிட்டது. எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டியநிலை காணப்படுகின்றது. பேரழிவு நடந்த குறுகிய நேரத்திலே எமது தேசியத் தலைவர் எடுத்த மதிநுட்ப நடவடிக்கையால் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் விளைவால் ஓரளவிற்கேனும் எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய சில ஆபத்துக்களை வெற்றிகொள்ளமுடிந்தது. அவரது நடவடிக்கைகளுக்கு இளம் சமுதாயத்தின் ஒத்துழைப்பும் பெரிதும் கைகொடுத்துதவியது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினர்களாக யாழ்ப்பாணம் கல்வியியற்கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன், வலி.மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு உட்பட நாடாளுமன்ற உறுப்பினரின் வலி.மேற்குச் செயலாளர் ச.ஐங்கரன் ஆகியோரும் உரையாற்றினர். (ப-29)

## கல்முனையில் சுனாமியால் பாதிக்கப்பட்டு

# சிகிச்சைக்கு கொண்டுசெல்லப்பட்ட பிள்ளைகள் அம்பாறையில் மாயம்!

காரைதீவு,பெப்.7

கல்முனைப் பிராந்தியத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கென அம்பாறை ஆஸ பத்திரிக்குக கொண்டுசெல்லப்பட்ட பிள்ளைகள் பலரைக் காணவில்லை எனத் தெரியவந்துள்ளது.

அவர்களில் பலர் வீரக்கொட மற்றும் அம் பாறை புறநகர்ப் பகுதிகளில் மறைத்து வைக் கப்பட்டிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாண்டிருப்பைச் சேர்ந்த இ.சிவலிங்கம் என்பவரின் 10வயது மகன் நிசாந்தன் சுனாமி யால் பாதிக்கப்பட்டு அம்பாறை ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். அங்கு ஒருகிழமை வார்ட் டில் இருந்ததை தாதி மெனிக்கே, ஊழியர் பிரான்சிஸ் ஆகியோர் கண்டுள்ளனர். மேலும் பலரும் கண்டுள்ளனர். பின்பு பிள்ளையைப் பாரமெடுக்கச் சிவலிங்கம் அங்குசென்றபோது பிள்ளையைக் காணவில்லையாம். ஆஸ்பத்திரி டாக்டரிடம் கேட்ட போது இங்கு அப்படி எவரும் இல்லை என்று கைவிரிக்கப்பட்டதாம்.

இது தொடர்பாகச் சிவலிங்கம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திடம் முறைப்பாடு செய்துள ளார். இதேவேளை, அவருக்கு அநாமதேய கடிதமொன்று ஆஸ்பத்திரியிலிருந்து வந்துள் ளது. "தங்கள் பிள்ளையைப்போல் பல பிள் ளைகள் அம்பாறைப்பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன். முயற்சித்தால் மீட்கலாம்" என்று அதில் எழுதப்பட்டுள்ளது. (3)

# பழுதடைந்த படகுகள் இலவசமாகத் திருத்தம்

### தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை

வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலையினால் சேதமடைந்த படகுகள் எம்.எம்.எஸ். (M.M.S) நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் இலவசமாகத் திருத் திக்கொடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, படகுக்கட்டுமானப் பயிற்சி நெறிகளும் தாளையடியில் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. பெரும்பாலானோர் இப்பயிற்சி நெறி யினைப் பெற்றுவருகின்றனர். அப்பகுதியில் கடந்த காலங்களில் தொழிலில் ஈடுபட்ட படகுகள் அனைத்தும் ஆழிப்பேரலையினால் சேதமடைந் திருந்ததினால் மீனவர்கள் தமது தொழிலை ஆரம பிப்பதில் பெரும்சிரமத்தை எதிர்நோக்கி வருகின் றார்கள். இதனைக்கருத்திற்கொண்டே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் படகுகளைத்திருத் திக் கொடுத்துவருகின்றனர். (த-182)




திருமணப் பந்தத்தின் 25 ஆவது வருட நிறைவு வாழ்த்து

மந்துவில் வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த

**திரு.வன்னியசிங்கம் திருமதி இந்திராணி**

(வ.பி.போ.சபை சாரதி)

தம்பதிகள்

எம் வாழ்வின் ஒளி தீபங்களாகத் திகழும் - இவர்களை இன்னும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து பிரகாசிக்க அகமகிழ்ந்து வாழ்த்தும்.

பிள்ளைகள்:
குமார், சாந்தன், றமணன், ரூபா.

(41790)(26-14)



## 45ஆம் நாள் நினைவஞ்சலி

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது திடீரென எம்மைவிட்டுப் பிரிந்த எம் யா/தாழையடி றோ.க.த.க.பாடசாலை மாணவச் செல்வங்களுக்கும் எம் கிராம மக்களுக்கும் எம் இதயம் நிறைந்த கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

மாணவர் பெயர்கள்

- கிறிஸ்ரி அன்ரன் ஜெனோஸ்ரன்
- அன்ரனி பெர்னாண்டோ கஜனிசானுகா
- விமலதாஸ் ஜனனிகா
- விமலதாஸ் குஜிபா
- ஹென்றி எட்வீசன் றோய்
- யோண் பொஸ்கோ ஜீவநாதன்
- அருளானந்தன் அனற்பிறின்சியா
- யேசுதாஸ் ஜெயப்பிரியா
- பிரான்சிஸ் வனோசன் பிரஷாத்

மறைவு
26
12
2004

எம் பாடசாலையின் நவநல் நட்சத்திரங்களே!
தாழையடிமண் பெற்றெடுத்த மாணவ மணிகளே - உங்கள்
பிரிவினால் நாம் அனலிலிட்ட புழுவாய்த் துடிக்கின்றோம்
காலனவன் கைகளுக்கு இங்கிதமாய்க் கிடைத்தீரே!
கற்றலோடு கலைதனில் வாகை சூடிய மணிகளே!
எம் பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பீர்கள் என்ற எம் கனவு
பகற்கனவாகி விட்டதே! என் செய்வோம்?
உங்கள் புன்சிரிப்பு முகமும் நீங்கள் உதிர்த்த வார்த்தைகளும்
கண்முன்னே காட்சியளித்து நெஞ்சைப் பிழிகின்றன!
இயற்கை அன்னையே! எம் பச்சைப் பாலகர்கள் செய்த கொடுமைகள்தான் என்ன?
கள்ளமில்லா நற்சிந்தையுள்ள எம் செல்வங்களை ஏன் பறித்தாய்?
எம் அன்பு வாடா மலர்களே நீங்கள் இறைவன் பாதத்தில் அமைதி கொளவீகள.

இவர்களுடைய ஆன்ம இளைப்பாற்றிக்காகத் தாழையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (08-02-2005) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/தாழையடி றோ.க.த.க.பாடசாலை.

(41809)(26-14)


# கல்முனையில் சுனாமியால் அழிந்த 15 பாடசாலைகள் புதிய இடங்களில்

### அமையும் என்கிறார் கல்விப்பணிப்பாளர்

காரைதீவு,பெப்.7

கல்முனை வலயத்தில் சுனாமியால் முற் றாக அழிக்கப்பட்ட 15பாடசாலைகளையும் புதிய இடத்தில் மீள நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான காணியை அதிபர் உள்ளிட்ட கல்விச்சமூகம் இனங் காட்டவேண்டும்.

- இவ்வாறு கல்முனை வலயக்கல்விப் பணிப பாளர் எம்.ரீ.அப்துல் நிஷாம் அதிபர்கள் மாநாட்டில் கூறினார்.

கல்முனை ம.்.மூத் மகளிர் கல்லூரியில் மேற்படி மாநாடு வடக்கு-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் இ.தியாகலிங்கம் முன்னிலை யில் வெள்ளியன்று நடைபெற்றது.

அங்கு பணிப்பாளர் நிஷாம் மேலும் கூறுகையில்:-

"கல்முனை வலயத்திலுள்ள 57பாடசாலை களில் 15 பாடசாலைகள் முற்றாகவும் 2பாட சாலைகள் பகுதியாகவும் சேதமடைந்தன. மேலும் 27பாடசாலைகள் அகதிமுகாம்களாக இயங்கிவருகின்றன. அவற்றில் முடியுமானா வரை பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆக 6 பாடசாலைகளே தற்போது அகதி முகாங்களாக இயங்குகின்றன.

9பாடசாலைகளில் அகதிகள் இருக்கின்ற அதேவேளை, பாடசாலையும் நடைபெறுகின்றது.

கல்முனை வலயத்திலுள்ள 57பாடசாலை களில் தற்போது 49பாடசாலைகள் இயங்கி வருகின்றன. அடுத்த வாரமளவில் அனைத்தை யும் ஆரம்பிக்கலாமென நம்புகிறேன்.

எமது பாடசாலைகளை மீள அமைப்பதில் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் கோடிக்கணக் கான நிதியைத் தர ஒப்பந்தம் செய்துள்ளன. ஆனால், கட்டடம் கட்டுவதற்கான காணியை எம் மால் பெறமுடியாது. அதனை நீங்களே இனங் கண்டு விரைவாகக் காட்டவேண்டும்.

அழிக்கப்பட்ட 14பாடசாலைகள் கடலிலி ருந்து 200மீற்றர் பரப்பிற்குள் வருவதால் அவற்றை மீள அங்கு கட்டமுடியாது. துரதிர்ஷ்ட வசமாக எமது பகுதியில் அரச காணிகள் வலு குறைவு. எனவே, தனியார் பொதுக்காணி களை இனங்காண வேண்டும்.

எது எப்படியிருப்பினும் எமது பாடசாலைகள் ஆக 4மணித்தியாலங்களுக்கே இயங்குகின் றன.

எமது சாதாரண, உயர்தரவகுப்பு மாணவர் களுக்கான பாடக்குறிப்புகள் பிரதிபண்ணிக் கொடுக்கவேண்டியுள்ளது. சாதாரண வகுப்பு மாணவர்களைப் பொதுவாக விடுதிகளுக்கு உள்வாங்கி நிம்மதியாக, சுயமாகக் கற்க வசதியேற்படுத்த வேண்டும்.

நாட்டின் ஏனைய பிரதேச மாணவருடன் போட்டிபோட்டு அப்பரீட்சைகளுக்கு எமது மாண வர்கள் தோற்றவேண்டும் அதற்குத் தயார்படுத்து வதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அகதிமுகாம்களில் இருந்து அவர்கள் படிக்க முடியாது. எனவேதான் பொதுவான விடுதி களுக்குச் சேர்த்துப்படிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பாடசாலைக்கு நாம் செல்கின்றபோது நாம் முன்பு பார்த்த அதே மாணவர்களா இவர்கள் என எண்ணத் தோன்றுகிறது. எனவே இயல்பு என்பது ஒருவருடமெடுக்கும் - என்றார். அதிபர் களும் உரையாற்றினார்கள். (3)

# சர்ச்சைக்குரிய குழந்தை பொலீஸ் பாதுகாப்பில் இவ்வாரம் கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு

### கல்முனை வைத்திய அதிகாரி தகவல்

காரைதீவு, பெப்.7

சர்ச்சைக்குரிய கல்முனைக் குழந்தை பொலீஸ் பாதுகாபபில் ஆஸ்பத்திரியில் உள் ளது. நீதிமன்ற ஆணைப்படி டி.என் ஏ.பரிசோத னைக்காக பொலீஸ் பாதுகாப்போடு இவ்வாரம் கொழும்புக்கு அனுப்பவிருக்கின்றோம். நீதி மன்ற ஆணைப்படிதான் நாம் நடக்கவேண்டும்.

இவ்வாறு கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்ச கர் டாக்டர் கே.முருகா னந்தம சம்பந்தப்பட்ட 'பேபி 81' குழந்தை பற்றிக் கூறினார்.

ஒரேயொரு பெற் றோர்தான் பிரஸ்தாப குழந்தைக்கு உரிமை கோரியுள்ளனர். அப் படியெனின் அவர்களு டன் ஏன் குழந்தையை ஒப்படைக்கக்கூடாது? என்று பொதுவான அபிப்பிராயம் இருக் கிறதே, இதுதொடர் பாக என்ன கூறுகிறீர் கள் என்று எமது செய்தியாளர் கேட்ட தற்கு இவ்வாறு டாக் டர் முருகானந்தம் பதிலளித்தார்.

"எமக்கு பிள்ளையை வைத்திருக்க வேண் டிய அவசியமில்லை. ஆனால், நீதிமன்ற ஆணை யின்படி அடுத்த வழக்குத்தவணை வரை வைத்திருக்கவேண்டியுள்ளது. நீதிமன்றம் நாளை உத்தரவிட்டாலும் குழந்தையை வழங்கத தயாராயிருக்கிறோம்" என்று கூறியுள்ளார். (3)

### புதிதாக விளையாட்டுக்கழகம்

தொல்புரம் மத் திய சனசமூக நிலை யத்தில் புதிதாக விளையாட்டுக்கழகம் கடந்த 2ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இவ்விளையாட் டுக் கழகத்திற்கு தொல் புரம் மத்திய சக்தி விளையாட்டுக்கழகம் எனப்பெயரிட்டு நிலை யத் தலைவர் சி.சதீஸ் வரன் ஆரம்பித்து வைத்தார். (த-ரி)

### சின்னம் சூட்டும் நிகழ்வு

தொல்புரம், பெப்.7

சுழிபுரம் விக்ரோ றியாக் கல்லூரியில் மாணவ முதல்வர் களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை கல்லூரி மண்டபத் தில் நடைபெறவுள் ளது.

இந்த நிகழ்வின் மாணவ முதல்வர் களுக்கான சின்னத் தைக் கல்லூரி அதி பர் திருமதி அ.வேலுப் பிள்ளை சூட்டிவைப் பார். (த-ரி)


## ஓராண்டு நினைவு நாள்

மலர்வு 01-06-1919
உதிர்வு 07-02-2004



அமரர் மருத்தீஸ் அழகுமணி

ஆண்டொன்று ... போனதுவோ
ஐயாவின் ... முகம் ... மறைந்து ... ?
தாழாது...தவிக்கிறோம்.
தந்தையே ... உன் ...நிழல் இழந்து ... !
தூறாத ... மழை ... மேக
மனம்... கொண்டு ... அழுகின்றோம் ...!
ஆறாத ... துயர் ...கொண்டு
தினம் ...தினம் ... தவிக்கின்றோம்!
மாறாத ...நினைவுடனே
மாறாடி ... நிற்கிறோம் அந்த
மூவரும் ... தேவரும் ... உம்மை...
முன்னிலைப்... படுத்தட்டும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பாஷையூர்.
(4172)

# எச்சத்திலும் எழுவோம்



முல்லைத்தீவு வலய கல்விப் புலத்தினரும், கடற்புலிகளின் அரசியல் துறையினரும் இணைந்து கடந்த 26 ஆம் திகதி முல்லைத்தீவு நகரின் மத்தியில் 'எச்சத்திலும் எழுவோம்' எனும் மகுடவரிகளுடனான ஆற்றுப்படுத்தல் நிகழ்வினை நடத்தினர்.

சுனாமி பேரலை அனர்த்தத்தின் கோரப் பசிக்கு இரையாகிப் போன, முல்லைத்தீவுக் கல்வி வலயத்தின் பள்ளி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பொதுமக்களுக்குமான ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளுடன், உறவுகளைப் பறிகொடுத்து வெந்துபோன உள்ளங்களுடன் வாழ்வதா - சாவதா என ஏங்கும் எம்மக்களை அகவழி ஆற்றுகைப் படுத்தி வாழ்வியலுக்குட்படுத்தும் நிகழ்வாக 'எச்சத்திலும் எழுவோம்' அமைந்திருந்தது.

பார்க்கும் திசையெங்கும் இடிந்து தரை மட்டமாகியிருந்த கட்டடங்களின் சிதைவுகள், 'ஓயாத அலை'யின் பின் ஓங்கி வளர்ந்த கட்டடங்கள், சுனாமிப் பேரலையால் சுக்குநூறாக்கப்பட்டிருந்தன. கொடும் அலையின் கோரத்தாண்டவத்திற்கு உயிர் பிழைக்க முடியாமற்போன பனைமரங்கள் வேப்பமரங்கள், இவற்றுக்குமப்பால், நீல நிறமாகி வெண்நுரையால் கரைமேவும் கடல் எச்சத்திலும் எழுவோம் நிகழ்வை எட்டிப்பார்க்கிறது.



முல்லைத்தீவு நலன்புரி நிலையங்களில் ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள்...

காலை 8.45 மணிக்கு நிகழ்வுக்கான பொதுச்சுடரினை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை தளபதி கேணல் ஜெயம் அவர்கள் ஏற்றி வைத்தார். வானைத் தொடுவதுபோல் பட்டொளி வீசிப் பறக்கும் புலிக்கொடி அன்று அரைக் கம்பத்தில் சோகம் நிறைந்தாற்போலும் மெதுவாக அசைந்தது. எண்ணிக்கை தெரியாது தொலைந்துவிட்ட பொதுமக்களது நினைவாக அமைக்கப்பட்ட பொதுச் சுடரினை, கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார். ஊழித் தாண்டவத்தில் முற்றிலும் இரையாகிவிட்ட மு/கள்ளப்பாடு அ.த.க.பாடசாலையின் எச்சமாகக் கிடைத்தது. ஒரு சுவர்க்கடிகாரம் மட்டுமே. நேரம் 8.50 தினைக் காட்டியவாறு இயக்கமற்றுப்போன அக்கடிகாரம் தான் கடலனர்த்த நேரத்தை எமக்குச் சரியாக எடுத்துக்கூறியது. ஒரு மாதகாலமாக இயங்காதிருந்த அதனை, பள்ளி மாணவர் இருவர் தாங்கிநிற்க அப்பள்ளியின் முதல்வர் இயங்கவைத்தார். இந்நிகழ்வு மு.ப. 8.50 மணிக்கு நிகழ்ந்தது.

ஆர்ப்பரிக்கும் அலைநடுவே அன்றலர்ந்த சிவப்பு ரோஜா மலர் கொண்டதாய் அமைந்த பொதுப்படத்திற்கு கூடியிருந்தோர் மலரஞ்சலி செலுத்தினர். விடுதலைப் பேரிலேயே ஆகுதியாகிப்போன மாவீரர்கள், பொதுமக்கள் நினைவான அகவணக்க நிகழ்வைத் தொடர்ந்து, சுனாமி அனர்த்தத்தில் பிரிந்துபோன உறவுகளுக்கான சுடர்கள் ஏற்றப்பட்டமை உள்ளம் உருக்கிய நிகழ்வாக இருந்தது. அலையோடு போராடும் குழந்தை தாயைத் தேடுவதாக அமைந்த,

அம்மா அம்மா அம்மா
அலையில் எங்கே அம்மா...

என்ற பாடல் பின்னணியாக இசைக்க, பெயர் தெரிந்த 230 மாணவர்களதும் ஏனைய மாணவர்களதும் மற்றும் ஆசிரியர்கள், பொதுமக்களதும் நினைவாக தனித்தனியாகச் சுடர்கள் ஏற்றப் பட்டன



சமூகம் அளித்தோர் அனைவரும் மெழுகுவர்த்தித் தீபங்களைத் தாங்கி நின்றனர். முகில்களை விலக்கி நிகழ்வினைப் பார்த்து ரசித்த ஆதவனுக்கு, வான் மூடிய புகை தடையாக அமைந்தது. மெழுகுவர்த்திகள் உருகுவதை விட, அங்கு கூடியோர் கண்களில் இருந்து உருகிய கண்ணீர் ஆறெனப் பாய்ந்தது. இரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு பெண் குழந்தையின் இரு கைகளிலும் மெழுகு வர்த்தியை ஏந்திப்பிடித்தவாறு, கூட்டத்தின் நடுவே குந்தியிருந்து அழுதுகொண்டிருந்த ஒரு மூதாட்டியின் நிலை கல்லையும் கரையவைப்பதாயிருந்தது.

ஆம், அசுரத் தாண்டவத்தின் பின் அவருக்கு எஞ்சியது அப்பிஞ்சுதான் போலும். இது போன்ற காட்சிகள் மேலும் பலபல.

அவலமாய்த் தொலைந்துபோன அனைத்து ஆன்மாக்களதும் ஈடேற்றத்துக்காக திருப்பலியும், அதனைத் தொடர்ந்து இந்துமத வழிபாடும் இடம்பெற்றது. 'கைவிடப்பட்ட ஜெருசலேம் நகரை மீண்டும் கட்டியெழுப்புவேன்' என்ற யேசுபிரானின் வாக்கை கருப்பொருளாகக் கொண்டு தொடங்கிய திருப்பலி, காணிக்கை வழங்கலுடன் நிறைவடைய இந்துமத ஆராதனை தொடர்ந்தது.

மனிதரது கொடுஞ்செயல்களைப் பொறுக்க முடியாத கடல் அன்னையின் சீற்றத்தையடக்க பால் சொரிந்து அர்ச்சித்து பண்ணிசையுடன் ஆராதனைகள் நிறைவடைந்தன. குடம் உடைத்து கொள்ளி வைக்க முடியாமல் போய்விட்டது எனக் கதறும் இதயங்களுக்கு சிறு ஆறுதலான வழிபாடுகள்.

சோர்ந்துவிட்ட இதயங்கள், வாழ்வை வெறுத்த மனிதர்கள், சோகத்தைச் சுமந்த உள்ளங்கள் இவை யாவற்றையும் ஆற்றுப்படுத்தி மீண்டும் வாழ்வியலுக்கு வழிப்படுத்தும் வகையில், முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் அரங்க ஆற்றுகை குழுவும் இணைந்து நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

'கொட்டுண்டு உதிர்ந்துவிழுந்த கொழுந்துகளே
மொட்டாகி மலர்ந்து விரிந்த இளைஞர்களே...'

எனத் தொடர்ந்த பாடலுடனான மரைஞ்சலியுடன் ஆரம்பமானது. அலை மோதி ஆவியாகிய ஆத்மாக்களுக்கான அஞ்சலி அது. மீனவ குடும்பங்களது நாளாந்த வாழ்க்கையின் போரின் அவலங்களுடன், சுனாமியின் அவலமும் சேர்ந்துவிட்டது. வாரிக் கொடுத்து வாழ்வுக்கு வளமூட்டிய கடல் இன்று தந்ததையெல்லாம் வாரிச் சென்றுவிட்டது. அகதிமுகாமில் வாழும் மூதாட்டியும் வேண்டல்கள். எங்களுக்கு குந்தியிருக்க ஒரு இடமும், குடிக்கக் கஞ்சியும், மாத்தியுடுக்க ஒரு உடுப்பும் இருந்தால் போதும். சுனாமி எங்கட ஆசைகளை சுருக்கியிருக்கு. மனிசர் தேவை என்டதை எங்களுக்குச் சொல்லியிருக்கு. சுனாமி கற்றுக்கொடுத்த பாடங்கள் அவை.



எங்களுக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும் வாழுங்கள். இங்கு உலாவுகின்ற எங்கள் ஆத்மாவுக்கு ஒளியைத் தாருங்கள் என்பன இறந்துபோன ஆத்மாக்களது ஆசைகள் மட்டுமல்ல எஞ்சியுள்ளோருக்கான ஆறுதல்கள் அவை.

அரங்க அமைப்பு இன்றி மிக எளிதாக நடைபெற்ற நாடக நிகழ்வு, அனர்த்தத்தில்

திருமதி லிங்கேஸ்வரி ரகுநாதன்
வலயக் கல்விப் பணிமனை,
முல்லைத்தீவு.

சிக்குண்ட மக்கள் மீண்டும் சொந்த இடங்களில் குடியேறி அச்சமின்றி வாழ்வதற்கான திறன்களைப் பெற்றுக்கொடுக்கத் தூண்டிய முயற்சியாக அமைந்தது. அனர்த்தத்தில் பாதிப்புற்ற பிரதேசங்களின் மீளமைப்புக்குப் பரிகாரம் தேடவேண்டியதும் பாதிக்கப்பட்டவர்களின் உளவிருத்தியை ஏற்படுத்துவதும் அனைவரது மனிதாபிமான கடமையுமென எடுத்துக்காட்டப்பட்டது. அரங்க செயற்பாட்டுக்குழு திரு. செ.செல்வகுமார், நெறியாளராகவும் நடிகராகவும் தோன்றி உளவழி ஆற்றுகைப்படுத்தலுக்கு உதவினார்.

தமிழ் என்பது அமிழ் என்பதிலிருந்து மருகியதாகவும் கூறப்படுகிறது. அமிழ்ந்து பின் தோன்றியதால் அமிழ் எனவாயிற்று.

எனவே தமிழர் வரலாறு, அமிழ்ந்த பின்பும் எழுந்ததாயுள்ளது. அவ்வாறாயின், நாம் மீண்டும் எழவேண்டும். வீழ்வது மீண்டும் எழுவதற்கே என்ற உண்மையைக் கருத்திற் கொண்டு, சோர்வடைந்த உள்ளங்களை ஆற்றுப்படுத்தும் நோக்கில் உருவான எச்சத்திலும் எழுவோம். முயற்சி எதிர்பார்ப்பின் பெரும்பகுதியை நிறைவேற்றியிருக்கிறது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. ★

# வடமராட்சி வடக்கு மக்களுக்காக நிரந்தர வீடுகள் அமைக்கப்படும்

## பாதிக்கப்பட்டோர் விண்ணப்பிக்கலாம்

குடத்தனை,பெப்.7

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வடமராட்சி வடக்குப் பகுதியில் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு வீடுகளை இழந்த குடும்பங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடற்கரையில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால் சொந்தக் காணிகளை உடைய குடும்பங்கள் நிரந்தர வீட்டிற்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கு காணி உரிமையை நிரூபிக்கும் ஆவணம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

தற்காலிக வீடுகளுக்கு விண்ணப்பிக்கும் காணி உரிமையற்ற குடும்பங்கள் வீடமைக்க உத்தேசித்துள்ள காணி உரிமையாளரின் சம்மதக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இதற்கெனத் தத்தம்பிரிவு கிராம அலுவலகரிடம் பெற்றுக்கொள்ளும் படிவத்தைப் பூர்த்திசெய்து உரிய இணைப்பு ஆவணங்களுடன் கிராம அலுவலரின் சிபார்சைப் பெற்று விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (த-78)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு மக்கள் வங்கி நிதியுதவி

## வடமராட்சி வடக்கில்!

குடத்தனை,பெப்.7

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கைச் சேர்ந்த குடும்பங்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு உதவுமுகமாக பருத்தித்துறை மக்கள் வங்கி கடந்த வியாழக் கிழமை தொடக்கம் உதவிக்கொடுப்பனவுகளை வழங்கிவருகின்றது.

தனி ஒருவராக இருந்தால் 2 ஆயிரத்து 500 ரூபாவும் ஒருவருக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட்டு வருகின்றது.

நிரந்தர சம்பளத்தைப் பெறும் உத்தி யோகத்தர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப் படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான பட்டியல் பருத்தித்துறை மக்கள் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (த-78)

# வடமராட்சி கிழக்கு மீனவர் சங்க சமாசத்துக்கு சுனாமியால் இழப்பு ஒரு கோடி 42 லட்சம் ரூபா

வடமராட்சி கிழக்கு,பெப்.7

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு ஒரு கோடி 42 இலட்சத்து 94 ஆயிரம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைமைச் செயலகக் கட்டடம், தளபாடங்கள் சேதமடைந்திருந்ததினால் 13 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் மொத்த விற்பனை நிலையத்தின் கட்டடம், வலைகள், வெளி இணைப்பு இயந்திரங்கள் சேதமடைந்திருந்ததினால் 27 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாவும் கடல் உணவு மொத்தக் கொள் வனவு மையம் சேதமடைந்ததினால் 29 லட்சம் ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

சங்கத்தின் லொறி, கூலர் வாகனம், மோட்டார் சைக்கிள் சேதமடைந்ததினால் 48 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

சமாசத்தின் மாமுனை, தாளையடி, ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய 4 கிளைகள் ஆழிப்பேரலையினால் அடித்துச் செல்லப்பட்டதினால் 13 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

தாளையடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த குளிரூட்டி அறை சேதமடைந்ததினால் 6 இலட்சத்து 86 ஆயிரம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(த-182)

## மருதங்கேணியில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

வடமராட்சி கிழக்கு,பெப்.7

வடமராட்சியில் தமது கஷ்டப் பிரதேச சேவையினைப் பூர்த்தி செய்தவர்களும், கஷடப் பிரதேசத்தில் கடமையாற்றி வந்த திருமணமான ஆசிரியர்களும், வசதியான வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்கள்.

வடமராட்சியின் கஷ்டப் பிரதேசமான மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கே அவர்கள் ஏற்கனவே விண்ணப்பித்ததற்கு ஏற்ப இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

(த-182)


## நீங்காத நினைவில் மூன்றாம் ஆண்டு

ஆனந்த மலர்வு அகால உதிர்வு
27.09.1977 07.02.2002



காலத்தின் கொடியவன் – உங்களை
எம்மிடமிருந்து பாதியிலே
பறித்துவிட்டானடா!
பாசம் என்ற கயிற்றினால்
பிணைக்கப்பட்டிருந்த எங்களை
விட்டுப் பிரிய எப்படி மனம் வந்தது?

அமரர்
ஜெயக்கொடி ஜெயரஞ்சிதன்
(மெத்தை ரஞ்சன்– பிரபல வணிக முகவர்)

3 ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

ஆறாத்துயரில் அல்லலுறும்:
குடும்பத்தினரும், உறவினர்களும்,
நண்பர்களும்.

(C/40826)


## பருத்தித்துறை விநாயகர் சமுத்திரத் தீர்த்தம்

குடத்தனை,பெப்.7

பருத்தித்துறை சிந்தாயாத்திரை சித்தி விநாயகர் (சின்னப்பிள்ளையார்) ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து நடைபெற்றுவரும் உற்சவ நிகழ்வுகளில் நாளை செவ்வாய்க்கிழமை 8ஆம் திகதி சமுத்திரத் தர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது.

(த-78)

## மணற்காட்டில் பலியானோருக்காக திருப்பலி ஒப்புக்கொடுப்பு

குடத்தனை,பெப்.7

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மணற்காட்டுப் பகுதியில் பலியானவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி, குடத்தனை பேதுருவானவர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மணற்காட்டுப் பங்குத்தந்தை அருட்திரு றோய் பெர்டினைன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்தத் திருப்பலி ஒப்புக்கொடுத்தலில் மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

வடமராட்சியில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தின்போது அதிக உயிர்கள் காவுகொள்ளப்பட்ட இடம் மணற்காடு என்பது குறிப்பிடத்தக்கது.

(த-78)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
10
-
05
-
1950



விண்ணில்
20
-
01
-
2004

அமரர் வல்லி துரைரத்தினம்

திதி: 07-02-2005

அன்பின் பிறப்பிடமே!
பண்பின் உறைவிடமே!
பாசத்தின் திரு உருவே!
ஞானமுள்ள குலக் குருவே!
எங்கள் அருமைத் தந்தையே!
ஓராண்டு என்ன நூறாண்டு ஆனாலும்
உமை எண்ணிக் கலங்கும் ஐயா
எங்கள் நெஞ்சம்.

இல.589,கொக்காவில் வீதி,
வசந்தபுரம்,
துணுக்காய்.

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

(C-40803)(46-14-26)

## நீங்கா நினைவில் நான்காண்டுகள்

மலர்வு
07
-
12
-
1939



உதிர்வு
21
-
01
-
2001

செல்வி பரமேஸ்வரி இராமலிங்கம்

திதி: அபரபக்க திரயோதசி

நான்காண்டுகள் சென்றாலும்
எம்மிதயத்தில் உங்கள் நினைவுகள்
என்றும் நிலைத்திருக்கும்!
காலங்கள் மறையலாம்
காலத்தின் கோலத்தால் உறவுகள் பிரியலாம்
ஆனால் எம் மிதயத்தின் நேசத்தை
எக்காலத்திலும் நீக்கிவிட முடியாது!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

தகவல்:
தீபன்,
கல்வயல், சாவகச்சேரி.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(41658)(46-14-26)



## இலங்கை இதழியல் கல்லூரி

இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் (SLPI) ஓர் இணைப்பு அமைப்பு

# பணிப்பாளர்

## – இதழியல் கல்லூரி

இலங்கை இதழியல் கல்லூரி உயர்ந்த தரத்திலான பத்திரிகையாளர்களை உருவாக்கும் முக்கிய நோக்குடன் நிறுவப்பட்டது. இக்கல்லூரி முழுநேர டிப்ளோமா பாடநெறியொன்றை நடத்துவதுடன் குறுகிய தவணையுடனான மத்திய தொழில்சார் பத்திரிகைத்துறை கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை உயர்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வள ஆய்வுத்திறம் வாய்ந்த வல்லுநர்களைப் பயன்படுத்தி ஒழுங்குமுறையாக நடத்தி வருகிறது. இக்கல்லூரியின் மாணவர்கள் நவீன வசதிகள், கலை உபகரணங்கள் சகிதம் வள ஆய்வு நிலையம் ஒன்றில் கற்கவும் பயிற்சி பெறவும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றனர். அத்துடன் இலங்கை இதழியல் கல்லூரி சுவீடனின் பத்திரிகையாளர்களுக்கான மேற்கல்வி நிறுவனமான "போஜோ"வுடன் பங்குதாரராக விளங்குவதால் அது ஒப்பற்ற மேன்மை வாய்ந்த நிலையமாக பலம் பெற்றுத் திகழ்கிறது.

இதழியல் கல்லூரியில் "இதழியல்துறை கல்லூரி - பணிப்பாளர்" பதவிக்கான வெற்றிடம் உள்ளது. இதழியல்துறை பணிப்பாளர் பதவியானது இக்கல்லூரிக்குள்ளான அதிசிரேஷ்ட நிலைவாய்ந்த பதவியாகும். இப்பதவியானது இப்பிராந்தியத்தில் இக்கல்லூரியை பத்திரிகையாளர் பயிற்சிக்கான அதிமேன்மை வாய்ந்த நிலையம் என்ற அந்தஸ்துக்கு வழிநடத்திச் செல்லும் முழுமையான பொறுப்பைக் கொண்டுள்ளது. இப்பதவியை வகிப்பவர் இலங்கை பத்திரிகைத்துறை நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபைக்கும் இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் செயலாளர் நாயகத்துக்கும் அறிக்கையிடுபவராக இருக்கும் அதேவேளை உயர்ந்த அனுபவம் வாய்ந்த ஊடகத்துறைப் பயிற்சி வல்லுனர் குழு ஒன்றுடன் சுதந்திரமாக பணிபுரிபவராகவும் இருப்பார். இப்பதவிக்கு நிறைவான

இப்பதவிக்கான விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டிய ஏனைய தகைமைகளாவன:-

- இளமாணி பட்டம் மற்றும் ஊடகக் கல்வி அல்லது அது தொடர்பான கல்வித்துறையில் பட்டப் பின் படிப்பு தகுதிகள் விரும்பத்தக்கது.
- ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சி மற்றும் மிகச்சிறந்த தொடர்பாடல் மற்றும் பொது மக்கள் தொடர்புகளில் திறன்கள்.
- ஊடக நிறுவனங்கள், பயிற்சி.'.கல்வி ஸ்தாபனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் அல்லது கூட்டு அமைப்பு ஆகியவற்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் பெற்றதற்கான நிருபிக்கப்பட்ட அத்தாட்சி.
- ஊடக நிறுவனங்களுடனும் அவை தொடர்பான தொழில்சார் நிறுவனங்களுடனும் மிகச்சிறந்த தொடர்பு கொண்டிருத்தல்.
- சர்வதேச ரீதியில் இது போன்ற பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்தக் கூடிய திறமை.

இதழியல் கல்லூரிப் பணிப்பாளர் ஒழுக்கத்திலும் நடத்தையிலும் உயர்ந்த தரங்களை நிறுவுபவராகவும் அவற்றைப் பேணுபவராகவும், சிறந்த நடைமுறைகளைக் கடைப்பிடித்து மிகச் சிறந்த முன்மாதிரியாக விளங்குபவராகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு கணிசமான ஊதியக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் ஒன்றும் பாவனைக்கு வழங்கப்படும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் உறவு அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்களுடன் விவரமான சுயவிபரக்கோவையை (CV) கீழ்க்காணும் முகவரிக்கு 2005 பெப்ரவரி 15ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை பத்திரிகை நிறுவனம்
65.'.5, வார்ட் பிளேஸ்,
கொழும்பு - 7

இலங்கை பத்திரிகை நிறுவனம் சமத்துவமான வாய்ப்பு வழங்கும் நிறுவனமாகும்.



## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31
01
1964



மறைவு
30
01
1995

அமரர்
செல்வராசா ஞானசேகரம் (ஞானம்)

திதி: 07/02/2005

(வத்திராயன் வடக்கு,தாளையடி)
பண்பின் பிறப்பிடமே!
பாசத்தின் இருப்பிடமே!!
கண்ணை இழந்தது போல்
உன் பிரிவு தோன்றுதையா – உந்தன்
வண்ண வதனமோ எம் மனதை விட்டு அகலவில்லை!
எண்ணங்களால் உன் பாதங்களில் மலர் தூவுகின்றோம்.

(41687)

தகவல - குடும்பத்தினா
T.P - 0777250977

# இணைப்பாட்சி இன்றேல் தமிழீழம் தானாக மலரும்

## கொழும்புக் கருத்தரங்கில் ஈழவேந்தன் எம்.பி.

"சுனாமி அனர்த்தத்தின் பின் சமாதானத்தின் எதிர்காலம்" என்ற தலைப்பில் அரசமைபபு விவகார அமைச்சு ஏற்பாடு செய்த கருத்தரங்கு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் ஆற்றிய உரையின் சுருக்கம் இது.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட அனைத்துச் சிங்களத் தலைவர்களும் தமது உரைகளைச் சிங்களத்திலேயே நிகழ்த்தினர். 1904ஆம் ஆண்டிலேயே 'சிங்கள நாக்குகள் சிங்களத்தைப் பேசாது விடின் யார் சிங்களத்தைப் பேசமுடியும்?' என்று சேர்.பொன் இராமநாதன் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நிகழ்த்திய உரைக்கமைய இங்குள்ள சிங்களத் தலைவர்கள் தமது உரைகளைச் சிங்களத்திலேயே பேசியதை வரவேற்கின்ற நான், தமிழன் என்ற முறையில் என் உரையினைத் தமிழிலேயே நிகழ்த்த விரும்புகிறேன். எனினும், என் தமிழ் உரையைச் செவிமடுத்துப் பொருள்புரியும் அவையோர் இல்லாத நிலையில், காலத்தின் அருமையும் கருதி என் பேச்சின் தொடக்கவுரையைத் தமிழில் நிகழ்த்துகின்ற நான், அவையோருடைய வேண்டுகோளுக்கு ஏற்ப என் உரையின் முக்கிய பகுதி அனைத்தையும் ஆங்கிலத்தில் நிகழ்த்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

பேராசிரியர் லக்சிறி பெர்ணான்டோ "நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம்' என்ற தலைப்பில் தான் எழுதிய நூலில் "சமாதானத்திற்கு எவருமே எதிரிகள் அல்ல" ஆனால், இது முற்று முழுதான உண்மை எனவும் கூற முடியாது. சிலர் சமாதானத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு யுத்தத்திற்குத் தயாராகலாம். மேலும், சிலர் சமாதானத்தைச் சொல்லளவில் மட்டுமே பேசுகின்றனர். இன்னும் சிலர் சமாதானத்தை ஒரு நீண்டகால இலக்கு எனக் கூறிக்கொண்டு, அந்த இலக்கினை அடைய யுத்தம் அத்தியாவசியமானது எனக் கூறுகின்றனர். முரண்பாட்டுக்கு உட்பட்ட தரப்பினர் பற்றிய அவநம்பிக்கை காரணமாகவே அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். உண்மையிலேயே யுத்தததினால் மட்டுமே சமாதானத்தை அடையலாம் என்ற எண்ணம் பயங்கரமான நிலை எனலாம் என்று பேராசிரியர் லக்சிறி பெர்ணான்டோ கூறிய கூற்று பொருள் பொதிந்தவையாகும். நாம் அதனை முழுமையாக வரவேற்கின்றோம்.

இன்று இலங்கையில் சமாதானம் என்ற சொல் எங்கும் ஓங்கி ஒலிக்கப்படுகிறது. ஆனால், உண்மையில் சமாதானம் என்ற சொல் முடிக்கப்படுகின்றது. ஆனால், உண்மையில் சமாதானம் என்ற பெயரில் போருக்கான ஆயத்தங்களே இன்று நடைபெறுகின்றன. 20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த அறிவியல் அறிஞர் Eienstein (அயின்ஸ்ரைன்) 1940களின் இறுதிப்பகுதியில் 'We speas of peace, but we preparing for war' (அமைதி பற்றிப் பேசிக்கொண்டு நாம் போருக்கு ஆயத்தம் செய்கின்றோம்) என்று, அன்று வேதனையோடு அவர் கூறிய கூற்று எம்முடைய இலங்கைச் சூழலுக்கும் ஏற்புடையதாக விளங்குகின்றது.

வரலாறு காணாத கடற்கோளினால் (சுனாமி) இலங்கை முழுவதும் குறிப்பாக, இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பேரழிவுக்கு ஆளாகியுள்ளது. இதிலிருந்து மக்களை மீட்க வெளிநாடுகளும் வெளிநாட்டமைப்புகளும் அனுப்புகின்ற பணம் மற்றும் இன்னோரன்ன பொருள்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்காது, போர்க் கப்பல்களில் போர்க் கருவிகளை - ஆயுதங்களை இலங்கை அரசு இறக்குமதி செய்வது அதனுடைய நேர்மையற்ற போக்கையும், முரண்பாட்டின் மொத்த வடிவமாக இலங்கை அரசு விளங்குவதையும் எடுத்துக்காட்டுகிறது.

அத்தோடு, காணவேண்டிய அறிஞர்களையும், மக்களையும் கண்டு இப்பேரழிவிலிருந்து மக்களை மீட்க, என்ன செய்யவேண்டும் என்று கருத்துரை வழங்கும் எம் தேசியத் தலைவர் பிரபாகரன், இக்கடற்கோளினால் விழுங்கப்பட்டுள்ளார் என்று கற்பனைசெய்து, வெறிகொண்ட சிங்கள ஊடகங்கள் தலையங்கம தீட்டி செய்திகள் வெளியிட்டு வருவது, நிச்சயம் இந்நாட்டில் அமைதி ஏற்படும் என்பதற்கு வாய்ப்பில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. ஆனால், இங்கு உரை நிகழ்த்திய சிங்கள அறிஞர்கள் உட்படப் பலர் இணைப்பாட்சி அடிப்படையில் இனச் சிக்கலைத் தீர்க்கலாம் என்று தெரிவித்துள்ள கருத்துகள் எமக்கு ஆறுதல் அளிக்கிறதெனினும், இது காலம் கடந்த ஞானமாகவே தோன்றுகிறது.

ஈழத்தமிழர் இணைப்பாட்சியில் இனிது வாழவிரும்புகின்றனர். ஆனால், இரு இனங்களிடையில் முழு நம்பிக்கை உருவாகிய நிலையிற்தான் இணைப்பாட்சி செயற்படமுடியும். அத்தகைய நம்பிக்கைத் தன்மை நம் நாட்டில் உண்டா என்பது இன்னும் பெரும் கேள்வியாகவே விளங்குகின்றது.

ஈழத்தமிழர் வேண்டி நிற்பது இணைப்பாட்சியின் சாயல்கொண்ட இந்திய அரசியல் அமைப்பையல்ல. மாறாக, மத்திய அரசினால் மாநில அரசுகள் கலைக்கப்படாத ஒரு பொருள் பொதிந்த இணைப்பாட்சியை நாம் நாடிநிற்கின்றோம். மூன்று ஆண்டுகளாக இடைக்கால அரசை எம் விடுதலைப் புலிகள் கோரிநிற்கின்ற நிலையிலும் அதனைத் தராது தட்டிக்கழிக்கின்ற சிங்கள அரசு எப்படி ஓர் இணைப்பாட்சி அரசைத் தரும் என்ற ஐயம் எமக்கு இயல்பாகவே ஏற்பட்டுள்ளது.

எனவேதான், இணைப்பாட்சி அமைப்பைச் சிங்களத் தலைமைப்பீடம் தராது தட்டிக்கழிப்பின் எப்படி ஒரு குடும்ப வாழ்வில் கணவன் - மனைவிக்கிடையே எக்காரணங் கொண்டும் அவநம்பிக்கை நிலவின் அவர்கள் மணநீக்கத்தை - விவாகரத்தை Judical Separationஐ நாடி நிற்பதைவிட வேறு வழியில்லை. இது கசப்பான முடிவுதான் ஆனால், தவிர்க்கமுடியாத ஒரு முடிவாகும். இதற்கு அமையவேதான் 57 ஆண்டுகளாகச் சிங்களத் தலைமைப்பீடத்தினால் ஏமாற்றப்பட்ட தமிழினம் சிங்கள வல்லாண்மையில் இருந்து எம்மை விடுவிக்க தனி நாடு வேண்டிநிற்கின்றோம். (3)

### புதுமுக மாணவர் வரவேற்பு விழா

தொல்புரம்,பெப்.7

தொல்புரம் அ.மி.த.க. பாடசாலையில் புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் பாடசாலை அதிபர் வ.பரமேஸ்வரம்பிள்ளை புதுமுக மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் மாலைகள் அணிவித்தும் வரவேற்பு நிகழ்வைச் சிறப்பித்தார். புதுமுக மாணவர்களின் பெற்றோர்களும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்கள்.(த-ரி)

சுனாமியால் வடக்கு- கிழக்கில்

# இறந்தோர் 16 ஆயிரத்து 934 காணாமற்போனோர் 5,589

## பூர்வாங்க மதிப்பீட்டில் தகவல்

காரைதீவு,பெப்.7

ஆழிப்பேரலையால் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 06 மாவட்டங்களில் 16 ஆயிரத்து 934 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 5 ஆயிரத்து 589 பேர் காணாமற்போயுள்ளனர். இறுதி மதிப்பீடுகள் மாவட்ட ரீதியாக வருமாறு:-

அம்பாறை - 9,050 பலி; 2,207 கா.போ., மட்டக்களப்பு - 2,840 பலி; 952 கா.போ., முல்லைத்தீவு - 2,771 பலி; 552 கா.போ., யாழ்ப்பாணம் - 1,167 பலி; 540 கா.போ., திருமலை 1,076 பலி; 337 மாயம், கிளிநொச்சி - 30 பலி; 01 கா.போ.

இதைவிட வடக்கு - கிழக்கில் 62 ஆயிரத்து 949 வீடுகள் பூரணமாக அழிக்கப்பட்டுள்ளன. 17 ஆயிரத்து 583 வீடுகள் பகுதியாகச் சேதமாக்கப்பட்டுள்ளன.

அம்பாறையில் 29 ஆயிரத்து 77, மட்டக்களப்பில் 15 ஆயிரத்து 939, யாழ்ப்பாணத்தில் 6 ஆயிரத்து 680, திருமலை மாவட்டத்தில் 5 ஆயிரத்து 974, முல்லைத்தீவில் 5 ஆயிரத்து 033, கிளிநொச்சியில் 246 வீடுகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

3 லட்சத்து 46 ஆயிரத்து 632 பேர் சுனாமி பாதிப்பினால் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் 96 ஆயிரத்து 255 குடும்பங்களிலிருந்து வந்தவர்கள்.

எனினும், மொத்தமாக ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 793 குடும்பங்களைச் சேர்ந்த ஆறு லட்சத்து 65 ஆயிரத்து 149 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 544 பேர் அகதிமுகாமிலும் 43 ஆயிரத்து 32 பேர் வெளியிலும் தங்கியுள்ளனர். (3)

# பொத்துவில் பால் சேகரிப்பு நிலையம் முற்றாக அழிந்தது 6,500 லீற்றர் பாலைத்தரும் கால்நடைகளும் சாவு

காரைதீவு,பெப்.07

பொத்துவில் பால்சேகரிப்பு நிலையம் சுனாமியால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த உபகரணங்களுடன் கட்டடமும் தகர்க்கப்பட்டுள்ளது. அங்கு தினமும் 6ஆயிரத்து 500லீற்றர் பாலை வழங்கும் கால்நடைகளும் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத்திணைக்களம் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளது.

பொத்துவில் மற்றும் முல்லைத்தீவில் அமைந்திருந்த இரண்டு மிருக பரிபாலன - அலுவலகங்களும் சேதமடைந்துள்ளன.

'நெக்கோட்' திட்டத்தின்கீழ் அண்மையில் பூர்த்தியான முல்லைத்தீவு அலுவலகமும் கடலால் காவுகொள்ளப்பட்டுள்ளது.

கல்லடியிலுள்ள கோழிப்பண்ணை சுனாமியால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த உபகரணங்களும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, சுனாமியால் பலியான கால்நடையாளர்கள் மற்றும் அவர்களது இழப்புகள் தொடர்பாகவும் தகவல்கள் திணைக்களத்தினால் பெறப்பட்டு வருகின்றன.

இதனால், இப்பகுதிகளில் கோழி, ஆடு இறைச்சிகளுக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்றது. வெளியூர்களிலிருந்து கோழி இறக்குமதி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(3)

# ஐந்து லட்சம் டொலர் உதவியை சர்வதேச கல்வியகம் வழங்கியது

## சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்விச் சமூகத்துக்கு உதவ

காரைதீவு,பெப்.7

சர்வதேச கல்வியகத்தின் பொதுச்செயலாளர் பிரட்வன் வியூவன் கடந்த வாரம் இலங்கைக்கு விஜயஞ்செய்தார்.

ஆசியப் பிராந்தியப் பிரதிநிதி அலோசியஸ் மத்தியூஸ்'ம் அவருடன் வருகை தந்த சுனாமிப் புனரமைப்புக் குழுவின் தலைவர் திருமதி வி.அஞ்சலாவிடம் 5 லட்சம் அமெரிகக டொலர்களைக் கையளித்தார்.

இந்நிதியிலிருந்து சுனாமியால் இலங்கையில மரணித்த ஆசிரியர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா முதற்கட்டமாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கல்வியகத்தில் இலங்கை சார்பாக அங்கம் வகிக்கும் ஐந்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு முகத்துவாரம் லசாலியின் நிலையத்தில் நடைபெற்றது.

இந்த 5 தொழிற்சங்கங்களில் ஒன்றான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம், நிர்வாகச் செயலாளர் எஸ்.சரவணபவானந்தன், மகளிர் அமைப்பின் தேசிய தொடர்பாளர் திருமதி ஈ.ஜே.மகேந்திரா ஆகியோர் கலந்துகொண்ட மற்றுமொரு கூட்டம் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

ஆசியப் பசுபிக் பிராந்திய இணைப்பாளர் ஆலோசியஸ் மத்தியூஸ் மீண்டும் இவ்வாரத்தில் இலங்கை வருவார். வடக்கு - கிழக்கில் தமிழர் ஆசிரியர் சங்கத்தினுடாக உதவிகள் வழங்கப்படும். (3)




யாழ். ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுதின விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுக்காலை யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ். ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ் உரையாற்றுவதையும் நிர்வாக இயக்குநர் மற்றும் கற்கைநெறி இயக்குநர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் -

மாணவன் ஒருவருக்கு இயக்குநர் கே.விக்னேஸ் சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரபா)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வாடகைக்கு

சகல வசதிகளும் கொண்ட அறைகள் மாத வாடகைக்கோ, தங்கிச் செல்வதற்கோ கொடுக்கப்படும். இல.75, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (மக்கள் வங்கி அருகில்).
T.P.: 077 6315971. (41740)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் கே.கே.எஸ். வீதிக்குக் கிட்டவாக 1½பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சுதா, C/o பாலகுமார், மைக்கிறா வைன்டேஸ், கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில். (41750)

## மணமகன் தேவை

1970ஆம் ஆண்டு, ரேவதி நட்சத்திரம், பாவம் குறைந்த, விவாகரத்துப்பெற்ற மணமகளுக்குத் தகுந்த, தகுதியான உள்நாடு, வெளிநாட்டில் அமையக்கூடிய மணமகன் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, இல. 286, நாவலர் வீதி, கைலாயபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். (41820)

சுனாமி தாக்கி 45 நாளாகியும்

# தமிழ்ப் பிரதேசத்தில் இடிபாடுகள் முழுமையாக அகற்றப்படவில்லை

காரைதீவு,பெப்.7

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 45 நாள்களாகியும் கல்முனைப் பிராந்தியத் தமிழ்க்கிராமங்களின் இடிபாடுகள் இன்னும் முற்றாக அகற்றப்படாத நிலையிலே இருந்துவருகின்றன.

ஏனைய பிரதேசங்களில் பல்வேறு ஸ்தாபனங்கள் நின்று இப்பணிகளில் ஈடுபட்டுவருவதனால் பெரும்பாலும் அங்கு இடிபாடுகள் அகற்றப்பட்டிருந்தன.

ஆனால், திருக்கோவில், தம்பட்டை, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, நீலாவணை போன்ற பகுதிகளிலுள்ள இடிபாடுகள் தொடர்ந்தும் அப்படியே கிடக்கின்றன.

கனரக வாகனங்களின் தட்டுப்பாடே இதற்குப் பிரதான காரணமெனக் கூறப்படுகின்றது. மறுபக்கம் இத்தட்டுப்பாடு தமிழ்ப் பிரதேசங்களுக்கு மட்டும்தானா என்று கேள்வி எழுகிறது.

இடிபாடுகள் அகற்றப்படுகின்றபோது மேலும் பல சடலங்களின் என்புக்கூடுகள் வெளிவரலாமென்றும் அஞ்சப்படுகிறது.

காலம் தாழ்த்தினால் இன்றைய உத்வேகம் குறைந்துவிடும். பினபு இப்பாரியசுமை பாதிக்கப்பட்ட மக்களிடம் மீண்டும் சுமத்தப்படலாம் என்றார் ஒருவர்.

கல்முனை வலய தமிழ் உதவிக்கல்விப் பணிப்பாளர் வ.சுப்பிரமணியம் கூறுகையில், எமது வீட்டுச்சூழலை சம்மாந்துறைப் பிரதேச சபை நண்பர்கள் துப்புரவாக்கினர். இன்று வீடுகழுவ ரூ.500 படி இருவரை அமர்த்தவேண்டி இருந்தது என்று வேதனையுடன்கூறினார். (3)

# கோண்டாவிலில் திருட்டு

கோண்டாவில்,பெப்.7

நள்ளிரவுவேளையில் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து ஒரு கையடக்கத் தொலைபேசி, 27 பவுண் நகை என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்தவாரம் பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள சரவணமுத்து கோடீஸ்வரன் என்பவரது வீட்டில் இடம்பெற்றது.

இதேவேளை, வீட்டின் உரிமையாளர் திருட்டுப்போன தனது கைத்தொலைபேசியின் இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தியபோது குறித்த கைத்தொலைபேசியின் 'சிம்காட்' இன்னொரு நபருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தமை தெரியவந்தது.

திருட்டுப்போன 'சிம்காட்டை' வாங்கித் தனது கையடக்கத்தொலைபேசிக்குப் பயன்படுத்திய நபர், உரிமையாளரை அழைத்து இந்த விடயம் பற்றிக் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாகப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (த-49)

# லிங்கநகரில் இருந்து 150 தமிழக் குடும்பங்கள் படை அதிகாரிகளால் வெளியேற்றம்

## தமிழ்மக்கள் பேரவை கண்டிக்கின்றது

திருகோணமலை,பெப்.7

திருகோணமலை லிங்கநகர் பிரதேசத்தில் வாழும் நூற்றிஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களை வெளியேறுமாறு திருமலை மாவட்ட இராணுவத் தளபதி நேற்றுமுன்தினம் கோரியுள்ளார்.

அங்குள்ள இராணுவ முகாமை விஸ்தரிக்கும் நோக்குடனேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை, அதை வன்மையாகக் கண்டித்துள்ளது. இதுதொடர்பாக அந்தப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலை லிங்கநகர் பிரதேசத்தில் கடந்த 15 ஆண்டுகளுககு மேலாகக் குடியேறி வீடுகளை அமைத்து நிரந்தரமாக வசித்து வரும் நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறும் அவர்களுக்கு வேறு இடத்தில் வசதியான வீடுகள் அமைத்து தரப்படுமெனவும் திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதியால் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு பலதடவைகள் நிர்ப்பந்தித்துள்ளதன் தொடர் நடவடிக்கையே இவ்வேண்டுகோளாகும்.

தற்போதைய சுனாமி அனர்த்தத்தை மையமாக வைத்து இம்மக்களை அங்கிருந்து வெளியேற்றி இராணுவ முகாமை விஸ்தரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

இராணுவ முகாமகளைச் சூழவுள்ள பல பிரதேசங்களில் கடற்கரைக் கருகில் பெரும்பான்மையினத்தவர் அத்துமீறிக் குடியேறியுள்ளனர். அவர்களை வெளியேற்றி அவர்களுக்கு உரிய வீடுகளை அமைத்துத் தருவதாகக் கூறாத இராணுவம் தமிழ் மக்கள் மட்டுமே செறிந்து வாழும் லிங்கநகர் பிரதேச மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கோருவது அவர்களினது கபடத்தன்மையையே காட்டுகின்றது.

தமிழர் தாயகத்தின் பூர்வீக மண்ணில் இருந்து மக்களை வெளியேறறி இராணுவ முகாமை விஸ்தரிக்கச் செய்யும் செயற்பாடு நிரந்தர சமாதானத்திற்கு ஒருபோதும் உதவாது. எனவே, அரசு உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு இராணுவத்தின் அழுத்தத்தை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (3-204)

# விதை உற்பத்தியாளர்களுக்கு விசேடபயிற்சி வழங்க ஏற்பாடு

வலி.தெற்கு,பெப்.7

உலக உணவு ஸ்தாபனத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் விதை உற்பத்தியாளர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புகள் திருநெல்வேலி மாவட்ட விவசாயத் திணைக்களப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளன. இம்மாதம் 8, 11, 15, 18 ஆம் திகதிகளில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகளுக்குத் தேவையான தரமான மரக்கறி விதைகளைப் பெறுவதில் நிலவும் கஷ்டத்தைப் போக்கி, திணைக்கள சிபார்சுக்கமையத் தரமான மரக்கறி விதைகளைப் பெறுவதறகாக - சுயவிதை உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காக - மேற்படி பயிற்சி வகுப்புகள் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், மேற்படி பயிற்சி நிலையத்தில் தோடை, தேசிக்காய் மற்றும் பழ மரச்செய்கையாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 10ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (த-152)

# நலன்புரி நிலையங்களில் இலையான் பெருக்கம்

வடமராட்சி கிழக்கு,பெப்.7

வடமராட்சி கிழக்கில் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் இலையான்களின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இதனால், தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-182)


## Supper Power Guard

TV, VCR, CD Player, Fridge, Washing machines, Water motor மற்றும் அனைத்துவிதமான மின் உபகரணங்களையும் மின் ஏற்றத்தாழ்வுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்குச் சிறந்த தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்ட Power Guard இனை 2 வருட உத்தரவாதத்துடன் வழங்குகின்றார்கள்.

**A.M. Electronic Products and Winding Works**

அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டி.
உங்கள் வீட்டிலிருந்தே தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பொருத்திக்கொடுக்கும் வசதியும் தருகின்றார்கள்.

(41791) (24-14) தொடர்புகளுக்கு: 0776 157123


## அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்: 25.10.1928

மறைவு: 08.01.2005

அமரர்

**சின்னவன் கனகு**



08.01.2005 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து எமது வேதனை உணர்வுகளில் கலந்துகொண்டும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எமக்குப் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். இன்று (07.02.2005)திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (41816)(43-14-24)

*செட்டியா வளவு,*
*ஜனசக்தி வீதி,*
*சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மீன்பிடிப் பயிற்சி வகுப்புகள்

தொல்புரம்,பெப்.7

பொன்னாலை, மூளாய் ஆகிய கடற்தொழிற் சங்கத்திற்குட்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடியியல் தொடர்பான பயிற்சி வகுப்புகள் தொல்புரம் மத்திய நெசவு நிலையத்தில் நடைபெற்று வருகின்றன.

நோர்வேயைச் சேர்ந்த மீன்பிடிப் பொறியியலாளர்களின் அனுசரணையில் நடைபெற்றுவரும் இப்பயிற்சி வகுப்புகளில் நவீனரக மீன்பிடி இயந்திரங்களை எவ்வாறு கையாள்வது மற்றும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது உபகரணங்கள் பழுதடைந்தால் அவற்றை எவ்வாறு கையாள்வது போன்ற விளக்கங்கள் இவ்வகுப்புகளில் அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி வகுப்புகளின் முடிவில் நோர்வேக் குழுவினரால் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி)

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் - முல்லைத்தீவு

வழக்கு இல.: 461/04
தன்மை: விவாகரத்து

மதன் சறோஜினிதேவி
காணி இல.: 53,
முதலாம் கண்டம் இடதுகரை,
முத்தையன்கட்டு.

வழக்காளி

விஜயதாஸ் மதன்,
3ஆம் கொலனி,
லிங்கபுரம்,
மூதூர்.

எதிராளி

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி இலக்க வழக்கானது வழக்காளியால் 2004 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் 10 ஆம் திகதியன்று எதிராளிக்கெதிராக விவாகரத்துக் கோரித் தாக்கல்செய்யப்பட்டு எதிராளியானவர் இறுதியாக வசித்துவந்த முகவரிக்கு அழைப்புக்கட்டளை அனுப்பிவைத்தும் அம் முகவரியில் எதிராளி - இல்லாமையினால் இப்பகிரங்க அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எனவே, இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் எதிராளியோ அவரைச் சார்ந்தவர்களோ அன்றி அக்கறையுடையவரோ மன்றில் தோன்றி நடவடிக்கை எடுத்தல் தவறுமிடத்து வழக்கு ஒருமுகமாக விளங்கப்பட்டு, வழககாளியின் உரிமைக்கோரிக்கைக்கு அமைவாகத் தீர்வு காணப்படும் என இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"

வரைவு:
**திருமதி நா.மோகனராணி,**
சட்டவாளர்,
சூட்டி வீதி,
முதலாம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (41813) (24-14)

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
முல்லைத்தீவு.

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

| 6ஆம் ஆண்டு | | 2ஆம் ஆண்டு | |
|---|---|---|---|
| மலர்வு: | உதிர்வு: | மலர்வு: | உதிர்வு: |
| 1929 | 1998 | 1949 | 2003 |
| 09 | 12 | 04 | 01 |
| 03 | 05 | 26 | 31 |





அமரர் **மூத்தார் சின்னத்துரை**
(செல்லமணி)
(ஓய்வுபெற்ற ஊழியர் - கா.சீ.கூ.)
திதி : திருதியை (29.11.2004)
அன்பு அப்பாவே எங்களை வாழ
வைத்த தெய்வமே! நீங்கள் மறைந்து
ஆண்டுகள் ஆறு சென்றாலும்
என்றும் எங்கள் நெஞ்சங்களில்
நீங்கள் அணையாத தீபம் அப்பா!

திருமதி
**புவனேஸ்வரி சின்னத்துரை**
(சோதி)
திதி: சதுர்த்தசி (07.02.2005)
கண்கண்ட தெய்வமே! எம் அம்மாவே!
வாழ்வில் மாண்புடன் வாழ்ந்து
எங்களை சிறப்புடன் வாழ்வதற்கு வழிகாட்டி
உறவுகளுக்கெல்லாம் உற்ற துணையாய் இருந்து
வாழ்ந்து காட்டி எல்லோரையும் தவிக்கவிட்டுச்
சென்று ஆண்டு இரண்டு ஆகிவிட்டதம்மா!

(41818)

இன்று எங்கள் தெய்வங்கள் இருவரதும்
ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
இன்னாவத்தை,
கொல்லங்கலட்டி.

தற்காலிக முகவரி:
காலையடி,
பண்டத்தரிப்பு.

என்றும் எம் தெய்வங்களின் நினைவில்
வாடும்:
மகன்மார், மகள் , மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

# இராணுவக் கெடுபிடிகளுக்கே அஞ்சாத மக்கள் இப்போது கடலைப்பார்த்துப் பயப்படுகின்றனர்

## கனகரத்தினம் எம்.பி.கூறுகிறார்

புதுக்குடியிருப்பு,பெப்.7

கடந்தகாலத்தில் இராணுவக் கெடுபிடிகளுக்குள் வாழ்ந்த போதும் மக்கள் அச்சம்கொள்ளவில்லை. ஆனால், கடலனர்த்தத்தின் பின் கடலைப்பார்க்கவே அஞ்சுகிறார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம்.

சுனாமி அனர்த்தத்தின் பின் முல்லைத்தீவு மக்களின் வாழ்வுநிலை பற்றிக் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தகால யுத்தத்திற்கு முகம் கொடுத்து வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த மக்களுக்கு சுனாமி அனர்த்தம் பேரிடியாக விழுந்துள்ளது.

90 ஆம் ஆண்டு தொடக்கம் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த இப்பிரதேசத்தை 97 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் 'ஓயாத அலைகள்' மூலம் மீட்டெடுத்தனர். அதன் பின்னர் மக்களின் இரத்தத்தினாலும், வியர்வையினாலும் இந்த நகரம் வளர்த்தெடுக்கப்பட்டது.

கடலில் எத்தனை உயிர்களைக் காவு கொடுத்த போதும் அஞ்சாத மக்கள், இந்தக் கடலனர்த்தத்தின் பின் கடலைப் பார்க்கவே அஞ்சுகின்றனர்.

இந்த மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவேண்டும். இப்பிரதேசம் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்கான உதவிகளை உலக நாடுகளும், புலம்பெயர்ந்து வாழும் மக்களும் செய்யவேண்டும் - என்றார். (த-353-204)

## புதுக்குடியிருப்பில் விபத்துக்கள் அதிகரிப்பு

புதுக்குடியிருப்பு,பெப்.7

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் வீதி விபத்துக்கள் அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனச் சாரதிகளின் அக்கறையீனமும் வீதிகளில் பயணிப்போர் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமையுமே வீதி விபத்துக்கள் அதிகரிக்கக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

வீதி விபத்துக்கள், தடுக்கும் வழிகள் தொடாபாகத் தமிழீழக் காவல்துறையினர் விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களை நடத்திவருகின்றனர்.

எனினும், விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்ததாகத் தெரியவில்லை. (த-353-204)




## அக்கராயன் வைத்தியசாலை சுற்றுச் சூழலில் பாதீனியம்

ஸ்கந்தபுரம்,பெப்.7

அக்கராயன் அரசினர் வைத்தியசாலைச்சுற்றுச் சூழலில் பாதீனியம் களைகள் வளர்ந்துள்ளன.

இப்பிரதேசத்தின் அருகில் அக்கராயன் குளமும், அதனது பிரதான நீர்ப்பாசன வாய்க்கால்களும் காணப்படுவதால், பாதீனியம் களைகள் விரைவில் பரவி வயல் நிலங்களுக்குச் செல்லும் அபாயம் உள்ளது.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் உரிய நடவடிக்கை எடுத்து பாதீனியம் களையை அழிக்கவேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-381-204)

## பொருண்மிய மதியுரையக கணனிப் பயிற்சி நிலையம்

### மன்னாரில் திறந்து வைப்பு

கிளிநொச்சி,பெப்.7

பொருண்மிய மதியுரையகத்தின் மன்னார் மாவட்டக் காரியாலயத்தினர் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்களின் நன்மை கருதி தகவல் தொழில்நுட்பக் கணனிக் கற்கை நிலையம் ஒன்றைத் திறந்துவைத்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி மாவட்ட இணைப்பாளர் கி.பிரபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தேசியக் கொடியினை அடம்பன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் காஞ்சனன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கணனிப் பயிற்சி நிலையத்தின் பெயர்ப் பலகையினைத் தமிழர் புனர்வாழ்வுக் கழக மன்னார் மாவட்டப் பணிப்பாளர் கேசவன் திரைநீக்கம் செய்து வைத்தார். கணனிக் கற்கை நிலையத்தினை மடு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜேசுதாஸ் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து ஆண்டாங்குளம் றோ.க.த.க. பாடசாலை அதிபர் விஸ்வராஜா கணனியினை இயக்கிக் கணனிப்பயிற்சியை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக மன்னார் மாவட்டப் பணிப்பாளர் கேசவன், 'கெயர்' நிறுவன உத்தியோகத்தர் கணேசலிங்கம், மடு வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் ஜேசுதாஸ், தமிழீழ மாணவர் அமைப்பின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் வேங்கை, ஆண்டான் குளம் றோ.க.த.க.பாடசாலை அதிபர் விஸ்வராஜா, 'சிக்மா' கணனிப் பயிற்சி நிலையப் பொறுப்பாளர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (த-203)

## பாதிக்கப்பட்ட இடங்களில் பணியாற்றும் தொண்டர்களுக்கு உளவளப் பயிற்சி


விசுவமடு,பெப்.7

முல்லை மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் பணியாற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், தொண்டர்கள் ஆகியோருக்கு நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் மூன்றுநாள் உளவளப்பயிற்சிநெறி நடத்தப்பட்டது.

முல்லை மக்கள் நலன்புரிச்சங்கத்தின் ஆதரவுடன் கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை உண்ணாபுல சங்கீதா முன்பள்ளியில் மேற்படி பயிற்சிநெறி நடத்தப்பட்டது.

'பமிலியன்' உளசமூக புனர்வாழ்வு நிறுவனத்தின் உளவளத்துணையாளர்களினால் நடத்தப்பட்ட இப்பயிற்சி நெறியில் 45 இற்கும் மேற்பட்டவர்கள் பயிற்சி பெற்றனர்.

இந்நிகழ்வில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன உளவளத்துணை சேவைக்குழு இணைப்பாளர் ம.சுகுமார், அன்னை இல்ல இயக்குநர் அருட்திரு. ரெஜினோல்ட் அடிகளார், முல்லை. மக்கள் நலன்புரிச்சங்க இணைப்பாளர் க.பாலசுப்பிரமணியம், தமிழீழ சுகாதார சேவைகள் முல்லைமாவட்ட இணைப்பாளர் பெ.இராம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-203-402)





சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டுள்ளது. அவ்வாறு அமைக்கப்பட்டுவரும் வீடுகளைப் படங்களில் காணலாம்.
*(படங்கள்:பரந்தன் செய்தியாளர்).*

## அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் நெடுங்கேணி அ.த.க. பாடசாலை

புதுக்குடியிருப்பு,பெப்.7

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பல பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகள் இல்லை.

நெடுங்கேணி வட்டடை பிரிந்தகுளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை குடிதண்ணீர், கிணறு, மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்குகிறது. தரம் 1 முதல் 5 வரையுள்ள இப்பாடசாலையில் மாணவர்கள் நீர் அருந்துவதற்காகவும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் அயல் வீடுகளை நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

அரசுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் பலதடவைகள் எடுத்துக் கூறியும் இது வரை எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என அதிபர் தெரிவித்தார்.

இவ்வாறான அசௌகரியங்களினால் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வன்னிப் பகுதியில் வவுனியா வடக்குப் பிரதேசம் மிகவும் வசதிகள் குறைந்த பிரதேசமாகும்.

இவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு செயற்படவேண்டியது தன்னார்வத்தொண்டு நிறுவனங்களினதும் அரசினதும் கடமை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-353)

## சைவநெறித் தேர்வில் 'ஏ' தரச் சித்தி

பூநகரி,பெப்.7

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை பாடசாலகளுக்கிடையே நடத்திய சைவ சமயத் தேர்வில் தரம் 9,10,11 இல் பூநகரி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 23 மாணவர்கள் 'ஏ' தரச சித்தி பெற்றுள்ளனர்.

அந்த மாணவர்களின் பெயர்கள் வருமாறு:-

தரம்-9:- தி.பிரபாலினி, செ.ராதிகா, தரம் 10:- கு.சுரேஸ், ம.றோகுலன், சு.அருட்செல்வி, ச.ஆதினி, செ.இந்துஷா, நெ.கிருஷாந்தினி, சௌ.சுகிதா, த.தர்ஷிகா, செ.பிரியதர்ஷினி, தரம்-11:- ஆ.லோபன், கு.வாகீசன், தி.ஆனந்தநிருஜா, பே.உதயகுமுதினி, ம.கீர்த்தனா, செ.சிவகௌரி, ப.சுதர்சனா, து.துஷ்யந்தினி, க.துர்க்காயினி, சி.விஜிதா, சு.சுஜிதா, து.அருந்ததி. (த-403-202)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

மல்லாவி, பெப்.7

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அனிஞ்சியன்குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் தொடர்பான முக்கிய விடயங்கள் குறித்துப் பேசப்படவுள்ளதால் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலயத் தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.சிவலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (த-203-322)

## பாதிக்கப்பட்ட 50 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு 'ஜீ.ரி.இசற்' நிறுவனம் துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது.

இப்பிரதேச மாணவர்களின் கல்விச் செயற்பாட்டினை முன்னெடுக்க உதவுமாறு, தொண்டு நிறுவனங்களிடமும் பொதுநிறுவனங்களிடமும தமிழீழகல்விக் கழகமும், வலயக்கல்விப் பணிமனையும் கோரிக்கை விடுத்திருந்தன.

அதற்கமைய 'ஜீ.ரி.இசற்' நிறுவனம் முதற்கட்டமாக 50 சைக்கிள்களை மாணவர்களுக்கு வழங்கி உதவியுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 'ஜீ.ரி.இசற்' இணைப்பாளர் சுந்தரம் டிவகலாலா, வலயக்கல்விப் பணிப்பாளர், தமிழீழக்கல்விக்கழகப் பொறுப்பாளர், முல்லை மாவட்ட கல்விக்கழகப்பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை-

இந்தப்பாடசாலை பழைய இடத்தில், தற்காலிகக் கொட்டகைகளிலேயே இயங்கி வருகின்றது. மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். தற்போது மாணவர் வரவு சற்று அதிகரித்துள்ளபோதும், தளபாட வசதிகள் எதுவும் இல்லை எனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-353-204)



# தனியார் பஸ் நிலையம் சுன்னாகத்தில் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7

சுன்னாகம் தனியார் பஸ்தரிப்பு நிலையக் கட்டடத்திறப்பு விழா நேற்றுக் காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.


வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சு.சொக்கலிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், மங்கள விளக்கினை இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்தினா, உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வ.பத்மநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பஸ்தரிப்பு நிலையக் கட்டடத்தினை யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்டத் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவருமான கே.கணேஷ் நாடாவினைவெட்டித் திறந்து வைத்தார்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் கண்ணன் கட்டடத்தின் பெயர்ப் பலகையினைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், வர்த்தகர்கள், கூட்டுறவாளர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(த-13-86)




'எய்ட்ஸ்' வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் றோட்டறக்ட் கழகமும் 'யூனியர் போ ஹெல்த் லைவ்' ஒருங்கிணைப்புக் குழுவும் இணைந்து நடத்திய 'எய்ட்ஸ' பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கி அதிகாரி டாக்டர் சிவசங்கர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (த-203)

# வெளியூர்களுக்கு அனுப்புவதால் நகரில் மீனுக்குக் கிராக்கி

அரியாலை,பெப்.7

தீவுப்பகுதி மற்றும் குடாக்கடல் பகுதியில் பிடிக்கப்படும் மீன்கள் இங்கிருந்து வடமராட்சி மற்றும் வலிகாமம் கிழக்கு ஆகிய பிரதேசங்களுக்கு விற்பனைக்காக எடுத்துச்செல்லப்பட்டு வருகின்றன. இதனால் யாழ்நகரில் மீன்வகைகளுக்குப் பலத்த கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

நகரப்பகுதியில் உள்ள கொட்டடி, பாசையூர், குருநகர் ஆகிய மீன்சந்தைகளில் மீன் விலை உயர்ந்துள்ளது. அத்துடன், போதியளவு மீன் வகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் கிராக்கி நிலைமையும் காணப்படுகிறது.

குடாக்கடலில் பிடிக்கப்படும் மீன்கள் வடமராட்சி உட்பட 'சுனாமி' அனர்த்தப் பகுதிகளுக்கு தினமும் எடுத்துச்செல்லப்படுவதாலேயே இந்தநிலைமை என்று மீன்வியாபாரிகள் கூறுகின்றனர்.

(ஜ-17)

# அபிராமிப்பட்டர் விழா

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அபிராமிப்பட்டர் விழா நடைபெறும்.

அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் விழா ஆரம்பமாகும். தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தைச் சேர்ந்த ஸ்ரீதர்சன் அபிராமி அந்தாதியை இசைப்பார். அபிராமி அந்தாதி நிறைவுற்றதும் அம்பாள் வீதியுலா வருவார்.

(த-173)

## முன்பள்ளிக் கட்டடத் திறப்புவிழா

தென்மராட்சி,பெப்.7

சரச்சாலை தெற்கு மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்க முன்பள்ளிக் கட்டடத் திறப்புவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தினைத் திறந்து வைப்பார். (த-117)

## சனசமூக நிலைய கட்டடத்துக்கு அடிக்கல்

தென்மராட்சி,பெப்.7

கைதடி கலைநகர் துர்க்கா சனசமூக நிலையத்திற்குப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பெப்.18 ஆம் திகதி பி.ப 5மணிக்கு இடம்பெறும். (த-117)


## 05.02.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300036484 இலிருந்து 300054184 வரை

சீட்டிழுப்பு இல. 1579

03 14 62 64 சுப்பர் எண் 09

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.20,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 20,00,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 38 | 5,000/- | 1,90,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 461 | 1,000/- | 4,61,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,570 | 500/- | 7,85,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,616 | 40/- | 9,06,640/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,400 | 20/- | 4,28,000/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,22,851 | 10/- | 32,28,510/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.84,97,150/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 28,62,100/-

300036484 - 300054184

300040395-2-96
300052425-0-17
300045665-8-88
300037554-9-80
300053179-7-76

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், கொட்டடி, இல.28, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த கந்தையா கலியுகன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 760551775V), வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் (இல.A011357539), வாகன காப்புறுதி அனுமதிப் பத்திரம், யாழ். பல்கலைக்கழக அடையாள அட்டை முதலான இன்னும் பல முக்கிய ஆவணங்கள் 05.02.2005 சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் ஆவரங்காலுக்கும் இடையில் பயணித்தின்போது தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் 021 222 6772 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது மேற்குறித்த முகவரியுடனோ தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (41826)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 651 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 04-2-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5226065 - 5238411 | |

வெற்றி இலக்கங்கள் 06 07 23 31

லக்கினம் இடபம்

ஜக்பொட் பரிசு ரூபா.38,27,250/- வெல்லப்பட்டுள்ளது
இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 2,65,496 | 10/- | 26,54,960/- |
| 2.இலக்கங்கள் | 24,358 | 20/- | 4,8[illegible]160/- |
| 1.இல + லக்கினம் | 24,187 | 30/- | 7,25,610/- |
| 2.இல + லக்கினம் | 2,238 | 100/- | 2,23,800/- |
| 3.இலக்கங்கள் | 665 | 500/- | 3,32,500/- |
| 3.இல + லக்கினம் | 47 | 5,000/- | 2,35,000/- |
| 4.இலக்கங்கள் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 38,27,250/- | 38,27,250/- |
| மொத்தம் | 3,16,999 | - | 97,38,530/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 97,38,530/-

தொடர் இல. 4271473 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5235453-4-47
5230483-3-43
5229778-6-22
5232772-0-04
5229365-0-42

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு சின்னத்தங்கம் (குருவி)



இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி முருகேசு சின்னத்தங்கம் அவர்கள் நேற்று (06.02.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னக்குட்டி, தங்கமுத்து செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருமைநாயகியின் அன்புத் தாயாரும் சி.அருச்சுணரின் அன்பு மாமியும் இந்திரன் - சிவாஜினி (சுவிஸ்), ஸ்ரீரமேஸ்வரன் - றஞ்சினி (பிரான்ஸ்), ஸ்ரீரமணன் - நந்தினி (ஜேர்மனி), ஜீவனா (H.N.D.A. 3ஆம் வருட மாணவி), மயூரன் (புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிவேதா, வருண் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2005) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளவாலை, மட்டிவளை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.*

(41827)

தகவல்:
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.


## பிரகாசமான விடிவெள்ளி

இன்றைய இலத்திரனியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் இலத்திரனியல் உதிரிகளும் இலத்திரனியல் வளர்ச்சியின் அதி உன்னதமான உருவாக்கமான கணனியில் உதிரிகளும், அதன் சிகரமான வலைப்பின்னல் உதிரிகளும் முழுமையாகவும், இறுதியாகவும் எமது மக்களுக்கு உலகத்தரப் பட்டியலில் முன்னுரிமை பெற்ற நிறுவனங்களிடமிருந்து நேரடியாக வழங்கும் நோக்கத்தில்

A Bright solution providing centre

இல்லை என்று எதுவுமில்லை

CeSCO A Computer & Electronics Solution Company for your tasty knowledge bite A PLACE for All Computing, Electronics & Networking

கம்பியூட்டர் துறையில் எந்தவொரு எலக்ரோனிக் பொருட்களையும் இணைக்க முடியும். அதற்குரிய ஆராய்ச்சி, மல்டிமீடியா சொலுசன், எலக்ரோனிக்ஸ் பரிசோதனைகள், திருத்தங்கள், புதுப் பொருட்கள் உருவாக்கம் மிக்ஸ்ட் எலக்ட்ரானிக்ஸ் எனப்படும் அனலக், டிஜிற்றல் சேர்ந்த இயக்கங்கள் உடனுக்குடன் உங்கள் முன்னிலையில் கைதேர்ந்த அனுபவ முதிர்ச்சி பெற்றவர்களின் ஆய்வுக்கூடமாகக் கொடுக்கப்படும்.

தரமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் TV, VCR மற்றும் CD, DVDகள் @ Colombo based price

Real imported products @ Lower Price

Our Speciallities:
- கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Compaq PIII கணனிகள்
- 3 years complete warrantied products
- All varieties Electnics, Computing & Networking p[roducts
- Offshoe Servicing
- யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Sony, Panasonic, National TV, VCR, VCD மற்றும் DVD கள்

ஒரே கூரையின் கீழ் கம்பியூட்டர், எலக்ரோன்னிக்ஸ் மற்றும் நெற்வேர்க்கிங் பொருட்கள் அதுவும் கொழும்பு நிர்ணயவிலையில்... இந்திய பொறியியல் துறையில் அதிஉன்னத எலக்ட்ரானிக்ஸ் அன்ட் கம்யூனிக்கேசன் துறையில் முதன்மை எஞ்சினியரிங் பட்டம் பெற்ற பொறியியலாளரின் நேரடிக் கண்காணிப்பில் உருவாக்கப்படும் ஒரு உன்னத நிறுவன வழங்கல்கள் வெகுவிரைவில் உங்கள் கைகளில்....

தரம் தராதரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்

Knowledge beyond the technology
ஒரே கூரையின் கீழ் சகல எலக்ட்ரோனிக்ஸ் பொருட்களும் அங்கு, இங்கு, எங்கு என்று அலைய வேண்டியதில்லை ஏன் தரம், தராதரம் மற்றும் நிரந்தரம் இது எங்கள் தாரக மந்திரம்
Never Fever Against Technology
காலம் எப்போதும் கனிந்திருப்பதில்லை. சகல எலக்ட்ரானிக்ஸ் பொருட்களும் ஒரே இடத்தில்... புதுமை அதுவும் எலக்ட்ரானிக்ஸ் துறையில் புதுமை. கொழும்பு நிர்ணய விலையில் எமது தாயகத்தில் உலகெங்கும் ஒரே தராதரப்படுத்தப்பட்ட விலையில் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள்

எமது அறிமுக சலுகைப்போதி பற்றிய விபரங்கள் அடுத்து வரும் தினங்களில்

CeSCO
56/15, ஸ்ரான்லி வீதி
இலங்கை வங்கி பின்புறம்,
பழைய போஸ்ட் ஒவ்விஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது.
சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந், நக்மா, ரகுவரன் மற்றும் பலர் நடித்த
**பாட்ஷா**

தினசரி காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)


# பணம் இன்மையால் திரும்பும் காசோலைகள்

கொழும்பு,பெப்.7

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசால் அவசர நஷ்ட ஈடாக வழங்கப்பட்ட ஐயாயிரம் ரூபாவிற்கான காசோலைகள் சில இடங்களில் பணமில்லாத காரணத்தால் வங்கிகளினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தென் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கே இந்த அனுபவம் நேர்ந்துள்ளது.

அரசால் வழங்கப்பட்ட இந்தக் காசோலைகளைப் பணமாக மாற்ற வங்கிகளுக்குக் கொண்டுசெல்லும்போது இந்தக் காசோலைகளுக்கு அரசுக் கணக்கில் வங்கியில் பணம் இல்லை எனத் தெரிவித்து அந்தக் காசோலைகள் வங்கி அதிகாரிகளினால் திருப்பப்படுகின்றனவாம்.

காலியைச் சேர்ந்த பலரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு இவ்வாறு மக்களை ஏமாற்றி வருவதை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)


**றைஞ்சனாஸ் சங்கானை**

பிரசாந், சினேகா நடித்த
**ஆயுதம்**
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பி.நே.)
(C/40667)

**லக்ஷ்மி சினிமா இணுவில்**
சிம்பு, சோனியா அகர்வால், வடிவேல், நாசர், ராஜ்கிரன் நடிப்பில்

**கோவில்**
காட்சி நேரம்: 11.00. 3.00. 7.00. (பி.நே.) (41111)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி திரேசம்மா அருளானந்தம் (நடராசா)



யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்குத்தெரு இல. 137ஜ பிறப்பிடமாகவும் 541, நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா அருளானந்தம் (நடராசா) அவர்கள் நேற்று (06.02.2005) ஞாயிறு காலை இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் நடராசா அவர்களின் அன்பு மனைவியும் திருமதி பிறேமலதா சாம் ஜீவரட்ணத்தின் பாசமிகு தாயாரும் சாம் ஜீவரட்ணம் (சின்னையா அன்சன்ஸ் உரிமையாளர்) அவர்களின் அருமை மாமியாரும், திருமதி குமுதினி சதீஸ்குமார்(கொலண்ட்), கெனத் (வேஸ்ட்விஷன்), கிறிஸ்ரீன் ஷியாளினி இவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (08.02.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல. 541, நவாலி தெற்கில் நடைபெற்று, யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் 4மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து, யாழ்.மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*541, நவாலி தெற்கு, மானிப்பாய்.*

தகவல்:
மருமகன் சாம்.ஜீவரட்ணம்
(சின்னையா அன்சன்ஸ்)
(41837)

### சின்னப்பு பரமநாதன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு பரமநாதன் (லேத் பயிற்சியாளர் - பற்றீசியன் இன்சிரியூட்) நேற்று (06.02.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வராணியின் (சிசிலியம்மா) அன்புக் கணவரும் கல்கி (மருந்தாளர் NIHS - களுத்துறை), லிண்டா லக்சுமி (ஆசிரியை - யாழ். மத்திய கல்லூரி), வாசுகி (பயிற்றப்பட்ட ஆசிரியை - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சின்னப்பு - அன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் திரேசம்மாவின் மருமகனும் யூட் சதீஸ்குமாரின் (எழுதுநர் - யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) மாமனாரும் ஏஞ்சலின் பேரனும் காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் ஜெகநாதன், ஈஸ்வரி, விக்னேஸ்வரன், மகேஸ்வரன், தனேஸ்வரி, காலஞ்சென்ற சாந்தி மற்றும் இராசேந்திரன் (வைரம்), புஸ்பராஜா, வரதராஜா, ஜெயந்தி, வசந்தி, சந்திரமோகன், முகுந்தன், சுமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2005) பி.ப.3.00 மணிக்கு இல.29/01, மருதடி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெற்று, பூதவுடல் பின்னர் எடுத்துச்செல்லப்பட்டு செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29/1, மருதடி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(41831)


**2007 A/L**

| | |
|---|---|
| Com. - Mr.பசில்<br>Acc. - Mr.தவா<br>Econ.Mr.கஜீதரன்<br>Eng.Mr.ஜெயக்குமார் | ★ Yr. -<br>3முதல் 11 வரை<br>★ 10 + 11 Eng. Lit. |

SHAMROCK J/Eachchamoddi Road. (41825)

**திருமணக் கார்**
குளிரூட்டப்பட்ட, ஜப்பான் கார்
திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: இல. 396
கைலாயபிள்ளையார் கோயிலடி.
உதயன் விருந்தினர் விடுதி ஒழுங்கை.
நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.
(சி/40829)

**மனோகரா** யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
விஜய், திரிஷா மற்றும் பலர் நடித்த
**திருப்பாச்சி**
நான்காவது கடைசி வாரம்
(17.02.2005 வரை)
காட்சி : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(C/40751)(22)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயன்தாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்

**ஐயா** (ரீல்ஸ்) கடைசி வாரம்
இயக்குநர் ஹரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

4 ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
**தேவதையைக் கண்டேன்**
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பி.நே.)
(C/39654)


## கண்ணீர் அஞ்சலி

எமது மருதடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகிய திருமதி லிண்டாலக்சுமி சதீஸ்குமார் அவர்களின் அன்புத் தந்தையாரான

**சின்னப்பு பரமநாதன்**

அவர்களின் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*J/77, மருதடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், யாழ்ப்பாணம்.*
(41828)

## மரண அறிவித்தல்கள்

### ஆரூரன் கிரிகரன்

புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆரூரன் கிரிகரன் அவர்கள் நேற்று (06.02.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஆரூரன் - ஞானேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் வித்தியா, கிருபாலினி, சிவாகரன், அனித்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கம்மாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.2.2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2மணியளவில் புத்தூர் அந்திரானை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் கிழக்கு, புத்தூர்.*

தகவல்:
ந.ஆரூரன்
(தந்தை- பாதுகாப்பு உத்தியோகத்தர் கோண்டாவில் மத்திய மருந்தகம்)
(41832)

### ஐயாத்துரை கணேசு (யாக்கரை அப்பு)



கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை கணேசு (யாக்கரை அப்பு) அவர்கள் நேற்று (6.2.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.2.2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்.
(41839)

## நெஞ்சை விட்டகலாத 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

### அமரர் கந்தப்பு கிருஷ்ணபிள்ளை

(விஷகடி வைத்தியர்)



அன்னை மடியில் 05.01.1924 — அலைகளின் பிடியில் 26.12.2004

*பாசச் சுமையோடு பறந்து சென்ற எம் தெய்வமே!*
*எம்மைப் பாதி வழியில் பரிதவிக்கவிட்டதேனோ?*
*கோடி தவமிருந்தாலும் தேடமுடியுமோ உங்களைப்போல்*
*ஒளிந்தக் கதியெமக்கு எப்படி நாம் தாங்கிடுவோம்?*

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்து அன்போடும் பாசத்தோடும் அரவணைத்துச் சுனாமியின் கோரப்பிடியில் சிக்கி அகால மரணமாகிய எமது பாசமிகு தந்தையின் திடீர் மறைவால் நாம் தவித்தபோது பல வழிகளிலும் உதவிகள் செய்தோருக்கும் உடன் வந்து ஆறுதல் கூறியோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் இறுதியாத்திரையில் கலந்துகொண்டவர்களுக்கும் இன்னும் பலப்பல வழிகளில் உதவி புரிந்த சகல அன்பு நெஞ்சங்களுக்கும் எமது உணர்வு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (07.02.2005) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு தம்பசிட்டி எரிந்த அம்மன் கோயிலின் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்வதோடு, நாளை (08.02.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தற்காலிக முகவரி**
'மனோ இல்லம்', அரசடி லேன்,
பருத்தித்துறை. T.P.: 0712373378

**நிரந்தர முகவரி**
மாமுனை, செம்பியன்பற்று.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.
(41834)

## நெஞ்சை விட்டகலாத 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

### அமரர் தனுஷியா கொன்சன்ரைன்

(யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியை, யாழ். தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய உள்ளகப்பயிற்சி ஆசிரியை)



அன்னை மடியில் 08.01.1980 — அலைகளின் பிடியில் 26.12.2004

**எம் கண்மணியே!**
**உன் கானங்கள் கேட்டு எம் காது குளிராதா?**
**உன் நயன நடையை இனி எப்போது பார்ப்போம்?**
**உன் துடுக்கான பேச்சை இனி எப்பிறப்பில் கேட்போமம்மா?**

சுனாமியின் கோரப்பிடியில் சிக்கி அகால மரணமாகிய எமது அன்பு மகளின் திடீர்மறைவால் நாம் தவித்தபோது பல வழிகளில் உதவிசெய்தோர்க்கும் உடன் வந்து ஆறுதல் கூறியோர்க்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலிகளை வெளியிட்டோருக்கும் மலர்வளையங்கள் வைத்தவர்களுக்கும் இறுதி யாத்திரையில் பங்குபற்றியவர்களுக்கும் இறுதிப்பிரார்த்தனையில் ஈடுபட்ட பங்குத்தந்தை, அருட்சகோதரிகளுக்கும் இன்னும் பல வழிகளில் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது உணர்வு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


நாளை (08.02.2005) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

'மனோ இல்லம்', அரசடி லேன்,
வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை. T.P.: 0712373378

**நிரந்தர முகவரி**
மாமுனை, செம்பியன்பற்று.

அப்பா, அம்மா,
அக்கா, அண்ணாமார்,
குடும்பத்தினர்.



திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்குவதற்கென கிறீஸ் நாட்டு அரசு அனுப்பிவைத்த மருத்துவக்கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. கப்பலின் ஒருபக்கத் தோற்றத்தப் படத்தில் காணலாம்.

## அவசரகாலச் சட்டம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றம் கூடும்போது இது பற்றி நாடாளுமன்றத்திற்கு தெரிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், தென்னிலங்கையில் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அரசக அதிபர்கள் உட்பட உயரதிகாரிகளுக்கு அவசரகாலச் சட்டம் காலாவதியானது பற்றி எதுவும் தெரியாதாம்.

காலி மாவட்ட செயலாளர் ஜி.ஹேவா விதாரண அவசரகால விதிகள் இன்னும் நடைமுறையில் இருப்பதாகத் தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ளார். நிவாரணவேலைகளை ஒழுங்குபடுத்த அவ்விதிகள் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை மாவட்டச் செயலாளர் எச்.ஜி. எஸ்.ஜயசேகரவின் நிலைப்பாடும் அதுதான் அந்த [illegible] கீழ் நிவாரணப்பணிகளை முன்[illegible] மேலதிக ஊழியர்களையும், வாகனங்களையும் பயன்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கைகளைத் தாம் எடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களிலும் இணைப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட இராணுவத் தளபதிகளும் இவ்வாறே அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளது என்றும்

அதன் மூலம் அத்தியாவசிய சேவைகளையும், பாதுகாப்பையும் தகுந்த முறையில் பேணமுடியும் என்று கருதுகிறார்கள் என்றும்-

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்ணாயக்கா தெரிவித்தார்.

அவசரகாலச்சட்டத்தின் கீழ் எந்த இடத்தையும் உடைத்து உட்புகவும், வாகனங்களையும், கலங்களையும் பலவந்தமாகப் பயன்படுத்தி கையகப்படுத்தவும், யாரையும் கைது செய்யவும் படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-10)

## உடைகிறது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இருந்து இரண்டு உறுப்பினர்களும், தலவாக்கலை நகரசபையின் பிரதித் தலைவரும் கட்சியிலிருந்து விலகினர்.

மத்திய மாகாண சபையின் உறுப்பினர் எஸ்.கோவிந்தராஜா அண்மையில் கட்சியை விட்டு விலகியதன் பின்பே மேற்குறிப்பிட்ட உறுப்பினர்களும் விலகினர்.

கட்சியின் தலைமைத்துவத்துடன் எற்பட்ட அதிருப்தியே இவர்கள் அனைவரும் கட்சியை விட்டு விலகக் காரணம் எனச்சுட்டிக் காட்டப்படுகின்றது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது.(க-10)

## புகுமுக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசி வாயிலாக தெரிவிக்கப்பட்ட தகவல்களை உடனடியாக ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

மருத்துவ பீடத்தில் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் ஒருசாரார் சம்பந்தப்பட்ட பகிடிவதைச் செயல்கள் தடுத்துநிறுத்தப்படாததை ஆட்சேபித்து மருத்துவ மாணவர் ஒன்றிய அவை உறுப்பினரும் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய ஆண்டுக்கான உபதலைவருமான சி.சிவரூபன் இந்தப் பதவிகளில் இருந்து விலகியிருக்கின்றார். இது தொடர்பாக அவர் மருத்துவ பீட நிர்வாகம் உட்பட சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் விரிவான கடிதம் அனுப்பியிருக்கிறார். மருத்துவ பீடத்தில் இடம்பெற்ற பகிடிவதைச் சம்பவங்கள் பலவற்றை விரிவாகக் குறிப்பிட்டு அவர் எழுதியுள்ள இந்தக் கடிதத்தின் பிரதி ஒன்று உதயனுக்கும் கிடைத்திருக்கின்றது.

புகுமுக மாணவர்கள் சிலர் மோசமாகத் துன்புறுத்தப்பட்டதற்கு தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.இவரது பதவி விலகல் தொடர்பாக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தினதும் அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத்தினதும் நிலைப்பாடுகளை உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

இதற்கிடையில் பகிடிவதைச் செயல்களில் ஈடுபட்டவர்கள் எனக் கூறப்படும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சில மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக ஒரு தகவல் தெரியவந்தது.

(ஐ-7-ரி)

# விடுதலைப் புலிகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரிகள் சகிதம் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் வேகன் விங்கலை கொழும்பில் சந்தித்த சமயம் புலிகளிடம் விமானங்கள் இருப்பது பற்றிய விடயத்தை எழுப்பினார். இந்தச் சந்திப்பில் முப்படைகள் மற்றும் பொலீஸாரின் சிரேஷ்ட கட்டளை அதிகாரியும் கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட, விமானப் படைத்தளபதி ஏயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பதிகாரி ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ஜயந்த ரணவீர ஆகியோரும் பங்குபற்றினர்.

அரசுத்தரப்பு இச்சந்திப்பில் மேற்படி விடயத்தைக் கிளப்பிய இரண்டு நாள்களின் பின்னர் குழப்பத்தை ஏற்படுத்தும் அந்தச் செய்தி கிட்டியது.

வியாழக்கிழமை இரவு வன்னியில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த - இஸ்ரேல் தயாரிப்பான - ஆளில்லா தேடுதல் உளவு விமானம், புலிகளின் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விமான ஓடுதளத்தில் விமானம் ஒன்று தரையிறங்குவதைப் படம் பிடித்தது.

இதன் மூலம் புலிகள் வசம் விமானங்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பது மட்டுமல்ல, ஓடுபாதை அருகே ஏற்கனவே படம் பிடிக்கப்பட்ட இரண்டு விமானங்களும் வெறும் மொடல்களாக (மாதிரிகளாக) இருக்கலாம் என்று சாக்குப் போக்குக் காரணம் கூறியவர்களின் கருத்துப் பொய்யாகியிருக்கின்றது.

விமானம் புலிகள் வசம் இருப்பது மீண்டும் யுத்தம் ஆரம்பிக்குமாயின் அவர்களின் 'முதல் தாக்குதல் வலிமையை' மேம்படுத்தும் சாதகத் தன்மையை அவர்களுக்கு வழங்கியிருக்கிறது.

சுவிஸ் தயாரிப்பான 'பிளட்டஸ் பிஸி 7' (Pilatus PC-7) அல்லது பிஸி 9 ரக விமானமே புலிகள் வசம் இருக்கலாம் என ஆரம்ப அறிக்கைகள் கூறுகின்றன.

அது பெரும்பாலும் பிஸி -7 விமானமாக இருக்கலாம் என்றே தமது பூர்வாங்கத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன என்று உயர் மட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

பிஸி-7 டேர்போ ஜெட் ரகத்தைச் சேர்ந்தது. 1978 முதல் தயாரிக்கப்பட்டு வரும் இந்த விமானத்தில் இதுவரை ஐந்நூறு விமானங்கள் விற்பனையாகியுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை இன்னும் சேவையில் உள்ளன.

பயிற்சி, வான் சாகசம், உபகரண, தந்திரோபாய, இரவுப் பறப்பு உட்பட சகல வசதிகளையும் கொண்டது இது.

இக்காரணங்களினால் தங்களின் விமானப் படை விமானிகளைப் பயிற்றுவிப்பதற்கு இந்த விமானத்தையே பல்வேறு நாடுகளின் விமானப் படைகள் பயன்படுத்துகின்றன.

அங்கோலா, ஆஸ்திரியா, பொலீவியா, பொட்ஸ்வானா, புரூணை, சாட், சிலி, பிரான்ஸ், கௌதமாலா, ஈரான், மலேஷியா, மெக்ஸிக்கோ, மியன்மார், நெதர்லாந்து, தென்னாபிரிக்கா, சூரினாம், சுவிற்ஸர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், உருகுவே ஆகிய நாடுகளின் விமானப் படைகள் இந்த விமானத்தைப் பயன்படுத்துகின்றன.

இந்த விமானத்தின் இறக்கைகளின் கீழ் சுடுகலன்கள் மற்றும் றொக்கெட்டுகள், குண்டுகளைப் பொருத்தவும், விமானியின் இருக்கையில் இருந்து அவற்றை இயக்கவும் வசதியுண்டு.

பல வருடங்களுக்கு முன்னர் இந்த ரக விமானங்களைக் கொள்வனவு செய்வது குறித்து இலங்கை ஆராய்ந்து வந்தது. எனினும் பின்னர் அதற்குப் பதிலாக பிரரேஸில் நாட்டின் 'சியா மாச்செட்டி' விமானங்களை இலங்கை அரசு கொள்வனவு செய்தது. அவை ஆக 150 கிலோ (குண்டு மற்றும் வெடி) பொருள்களை கீழே தாங்கிச் செல்லக்கூடியவை.

இதுதவிர சீனத் தயாரிப்பு F-7 ரக வழி மறிப்பு ஜெட்களையும் இலங்கை கொள்வனவு செய்தது. வழமையாக வானிலிருந்து வான் நடவடிக்கைகளு[illegible]ப் பயன்படுத்தப்படும் விமான ரகம் [illegible]. எனினும் இலங்கை விமானப் படைக்காக வானத்திலிருந்து தரைக்குத் தாக்குதல் நடத்தக் கூடியவையாக - ஆயிரம் கிலோ வரையான எடையைக்கீழே தூக்கிச் சென்று தாக்கக்கூடியவையாக அவை மாற்றம் செய்யப்பட்டன.

### புலிகளின் விமானம்

கனடாவின் 'பிரட் அன்ட் வைட்னி பேர் போபுறொப்' இயந்திரம் பொருத்தப்பட்ட 'பிளட்டஸ் பிஸி 7' ரக விமானமானது, சியா மாச் செட்டி விமானம் மற்றும் F-7 ரக விமானங்களையும் விட அதிகமாக - ஆயிரத்து 40 கிலோ வெடிப்பொருள்களைத் தாங்கிச் செலக்கூடியது.

ஆகக்கூடியது 2 ஆயிரத்து 700 கிலோ எடை தாங்கிப் புறப்படவும் 2 ஆயிரத்து 565 கிலோ எடையுடன் தரையிறங்கவும் இந்த விமானத்தால் முடியும்.

சாதாரணமாகத் தொடர்ந்து ஆயிரத்து 200 கிலோ மீற்றரும், மேலதிக எரிபொருள் தாங்கி வசதியுடன் 2 ஆயிரத்து 630 கிலோமீற்றரும் பறக்கக்கூடிய இந்த விமானத்தின் விடாமல் தொடர் பறப்பு நேரம் 4 மணித்தியாலம் 45 நிமிடங்களாகும்.

புலிகள் புதிதாக அமைத்துள்ள ஓடு பாதையின் நீளம் ஆயிரத்து 250 மீற்றராகும். ஆனால், இந்த விமானம் ஓடி எழும்பிப் பறப்பதற்கு ஆகக்கூடியது 780 மீற்றரும், இறங்குவதற்கு ஆகக்கூடியது 505 மீற்றரும் ஓடுபாதை போதுமானதாகும்.

இந்த விமானம் நிறைய வெடிகுண்டுகளோடு ஒரு தாக்குதல் நடத்தப்படுமானால் அது மிக மோசமானதாக இருக்கும். இந்த விமானம் தன்னால் தாங்கக்கூடிய ஆயிரத்து 40 கிலோ வெடிப்பொருள்களுடன் ஒரு தாக்குதலை நடத்தும்போது அதன் பாதிப்பு நினைத்துப் பார்க்கமுடியாதாக இருக்கும்.

வழக்கமாக ஒரு வெடிகுண்டின் மூன்றில் ஒரு பகுதி எடை வெடிமருந்தாக இருக்கும்.

1996 ஜனவரி 31 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் தாக்குதலில் ஆக 50 கிலோவெடிப் பொருளே பயன்படுத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 86 சிவிலியன்கள் மற்றும் பொலீஸ் உறுப்பினர் ஒருவர் பலியாகினர். மத்திய வங்கிக்கருகில் ஜனாதிபதி மாவத்தையில இருந்த சிலிங்கோ ஹவுஸ், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், ஏபிஎன் வங்கி, ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் உட்பட அனைத்துக் கட்டடங்களும் இத்தாக்குதலில் சேதமடைந்தன.

தனது விமானப் படையையும் அதன் மூலம் வான் பலத்தையும் உருவாக்கி நிலைப்படுத்தும் முயற்சியில் புலிகள் முனைப்பாக ஈடுபட்டிருக்கின்றனர் என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது.

ஏற்கனவே புலிகளின் உறுப்பினர்களுக்கு வெளிநாடுகளில் விமானி மற்றும் விமான ஊழியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. - இப்படி இக்பால் அத்தாஸ் மேலும் தெரிவித்துள்ளார். (எ-க-10)

## நிவாரண நிதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுனாமியால் பாதிப்படைந்த சகல மாவட்டங்களுக்கும் சென்று அனைத்தையும் பார்வையிடவுள்ளேன்.

ஆங்கிலம் மற்றும் கணனி என்பவற்றை ஆர்வத்துடன் கற்றால் அவை இலகுவாக இருக்கும். தற்போது எனக்குச் சில தமிழ் சொற்கள் பேசத் தெரிகின்றது. தமிழ் மொழியை நான் ஆர்வத்துடன் கற்றபடியால் சில சொற்களை பேசக் கற்றுக்கொண்டுள்ளேன்.

இங்கிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடம்தான் நான் தமிழைக் கற்று வருகிறேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா, லண்டன் போன்ற பல்வேறு நாடுகள் நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன. இந்த உதவிகள் அந்த மக்களை சென்றடைய வேண்டும் - என்றார். .. (10-7)


CHEMISTRY CENTRE
Temple Road (Green Park முன்னே)
A/L 2007 General Chemistry
Mon., Fri. 5 - 6 p.m. (சி-40842)
BY: அன்பழகன் B.Sc.



மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பட்டிந்தரப்படும்.

IDD 25/= மட்டும்

ஒரு வருட உத்தரவாதம் உண்டு

13900/- மட்டும்

| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணை நிறுவனம். மேலதிகவிவரங்களுக்கு:

பவர் செலுலர் ரேடிங் கம்பனி

Office: இல.185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 7070, 0712399220, 0777 281521.

Shop: இல.205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

புதிய அலுவலகம்: No. 309A Floor, (OPR. Union Bank) Galle Road, Bambalapitiya.



தனித்துவத் தன்மையுள்ள பிரகாசமான விடிவெள்ளியொன்று யாழ்ப்பாணத்தில் பிரகாசிக்கப் போகிறது
விபரம் 12 பக்கம்



NEW SCIENCE CENTRE
யாழ் நகர்
A/L 2006 INORGANIC
பிரிவு II ஆரம்பம்: 09.02.2005
Wed., Mon. 3-4 p.m.
(சி-40842)
"INORGANIC PAPER"
ஆரம்பம்: 11.02 வெள்ளி 3p.m.
"சேதனத் தாக்கப் பொறிநுட்பங்கள்" கருத்தரங்கு அநேக மாணவரின் வேண்டுகோளிற்கிணங்க 2ஆவது தடவையாக 08.02. செவ்வாய் 10.30இற்கு இடம்பெறும். கட்டணம் 50/=
அன்பழகன் B.Sc.


## மரண அறிவித்தல்

### சௌபாக்கியம் சிவராமலிங்கம்

கோவிந்திரம்பத்தை, தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த சௌபாக்கியம் சிவராமலிங்கம் நேற்று (06.02.2005) ஞாயிற்றுக் கிழமை மாலை தனது நூறாவது வயதில் சிவனார் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோ.சிவராமலிங்கம் (பிரபல வர்த்தகர் - அநுராதபுரம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நவமணி, தங்கரத்தினம், காலஞ்சென்ற கனகபூசணம், சோமசேகரம், மனோன்மணி, சுகிர்தமணி, சுகிர்தலிங்கம், சாந்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2005) திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் தும்பளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்மார்:-
சி.சோமசேகரம்,
சி.சுகிர்தலிங்கம்,
சி.சாந்தலிங்கம்.

*கோவிந்திரம்பத்தை,*
*தும்பளை,*
*பருத்தித்தறை.* (சி-40843)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.